
மனிதர்களை கண்டால்
குழிபறிக்கும்
மூலிகை

# 1 - மனிதர்களை கண்டால் குழிபறிக்கும் மூலிகை



அந்த பெரியவர் சிறுவர்களுக்கு ஒரு விளையாட்டு பொருள், சிறுவர்களின் கையில் கிடைக்கும் சிறு கூழாங்கற்கள் அவர் உடலை பதம் பார்ப்பதும் உண்டு, மற்றவர்களுக்கு அவர் ஒரு அறுவருப்பு பொக்கிஷம், இடுப்பை மறைக்கும் கிழிந்த சாக்கு. முகத்தை மூடி மறைத்திருக்கும் பெரிய சாடமுடியும். தாடியும். குளித்தே பலவருடமாக அழுக்கில் உரம் ஏறிப்போன உடம்பும். குப்பைகளை வாரி வைத்து முதுகில் தொங்கவிட்டு இருக்கிற பாங்கும் தெருமுனையில் அவர் வந்தவுடன் வீசும் முடைவீச்சும். யாரையும் அவரிடம் அண்ட விடாமல்தான் செய்யும், திடீரென்று அவர் போடுகின்ற கூச்சலும். பாடுகின்ற பாடலும் மூளை பிளந்து போன பரம்பரை பைத்தியம் என்று பறைசாற்றும். ஊரில் இருக்கின்ற குப்பைகளையெல்லாம் பொறுக்கி எடுத்து பையில் திணித்துக் கொள்ளும் அவரின் ஆவேசம் எல்லோரையும் பயமுறுத்தும்.

இப்படிப்பட்ட அந்த பைத்தியத்தை அணுகிய மகாகவி பாரதியார். ஏன் இப்படி குப்பைகளை சுமக்கிறாய் என்று கேட்டாரம், அதற்கு அந்த பைத்தியம் முண்டம் முண்டம் நான் வெளியில் சுமக்கிறேன், நீ உள்ளுக்குள் சுமக்கிறாய் என்று கூறியதாம், அப்போதுதான் பாரதியாருக்கு புரிந்து இருக்கிறது, அவர் ஞானப்பித்தன் என்று வெளியில் தெரியும் கோலத்திற்கும் உள்ளுக்குள் இருக்கும் ஞானத்திற்கும் எந்த தொடர்பும் இல்லை, அலங்கரிக்கப்பட்ட பூக்களைப் புரட்டிப் பார்த்தால் புழுக்கள் நெளிவதைப் பார்க்கலாம், கலங்கி நிற்கும் சாக்கடையை துழாவினால் தங்கமும் கிடைக்கலாம்.

நம்மைப்போன்ற சாதாரணர்கள் அலங்காரத்தையும். அழகையும் பார்த்து ஏமாறுகிறோம், கண்முன்னே இருக்கும் அழகான ரோஜா தோட்டத்தை விட்டு

விட்டு வானத்திலிருந்து ஒரு கந்தர்வ தோட்டம் குதிக்கப்போவதாக கனவுகளில் மிதந்து காலத்தை வீணாக்கி கொள்கிறோம், மிக சாதாரண நடப்பில் கூட மிகப்பெரும் விஷயம் அடங்கியிருப்பதை கவனிக்காமல் பல நேரத்தில் ஊதாசினம் செய்து நமது அறிவு வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை போட்டுவிடுகிறோம்,

நான் ஒரு நாயை 2 நாட்களாக கவனித்து வந்தேன், 2 நாட்களாகவே அந்த நாய் எதுவும் சாப்பிடுவதில்லை, வழக்கமான சுறுசுறுப்பு அதனிடம் இல்லை, வாய்விட்டு குரைக்கக் கூட. அது யோசனை செய்து கொண்டிருந்தது, மந்தமாக எதையோ சாப்பிடக் கூடாததை சாப்பிட்டு விட்டது போன்று உடலை நெளிப்பதும். வளைப்பதும் சுருண்டு படுப்பதுமாக இருந்தது, 3வது நாள் காலை என்று நினைக்கிறேன் உடைந்த செங்கல்களுக்கு இடையில் முளைத்திருந்த ஏதோ ஒரு செடியை போய் ஆசையுடன் தின்றது, எனக்கு அந்த காட்சி அதிசயமாக இருந்தது, ஆடு. மாடுகள். இலை. தழைகளை தின்பது ஒன்றும் வியப்பல்ல, நாய் தின்பது விந்தையாகவும் விசித்திரமாகவும் இருந்தது, என்ன ஆச்சரியம் சிறிது நேரத்தில் அந்த நாய் வாந்தி எடுத்தது, வாந்தியில் கந்தை சாக்கு பகுதிகளும் வந்து விழுந்தன.

நமக்கு நோய் வந்தால் அந்த நோயின் தன்மைக்கு ஏற்ப மருத்துவரை அணுகி மருந்துகளை வாங்கி சாப்பிடுகிறோம், நாம்வளர்க்கும் விலங்குகளுக்கும் கூட நாம் வைத்தியம் பார்க்கிறோம், ஆனால் தானாக பிறந்து வாழ்ந்து முடிந்து போகும் சாதாரண ஜீவன்களான இவைகளும் நோய் வந்தால் மருந்தை தேடும் அறிவை பெற்றிருப்பது இறைவனின் பெருங்கருணையல்லவா? இன்ன நோய்க்கு இன்ன மருந்து என்பதை ஐந்தறிவு ஜீவன்கள்கூட மிக தெளிவாக அறிந்து வைத்திருப்பது அதிசயத்திலும் அதிசயம் தானே.

நாய் தின்ற அந்த செடியை எடுத்து வரச்சொல்லி அதை ஆராய்ந்து பார்த்தேன், அந்த செடியின் பெயர் “தேள் கொடுக்கு இலை” என்பதை புரிந்து கொண்டேன், சாதாரணமாக அந்த தழை கிராமங்களில் தற்கொலை செய்து கொள்ள விஷம் சாப்பிட்டவர்களை வாந்தி எடுக்க வைக்க இதைப் பயன்படுத்துவர், நாய்கள் வாந்தி எடுக்க இந்த தழையை மட்டும் பயன்படுத்துவதில்லை, அருகம்புல்லையும் பயன்படுத்தும். பூனை. குரங்கு முதலியவை இத்தழைகளின் சக்தியை அறிந்து வைத்திருக்கின்றன, மிக சாதாரண விலங்குகளே மூலிகைகளை பயன்படுத்தி நோய்களை நீக்கி கொள்ளும் போது இறைவனின் உயரிய சிருஷ்டியான மனிதன் எந்த அளவு அறிந்து வைத்திருப்பான் என்று எண்ணி வியந்து போனேன்,

வான வெளியில் சதா சஞ்சரித்துக் கொண்டு இருக்கிற ஒலி அலைகளை மந்திரமாக கண்டறிந்து வெளியிட்ட மனிதன் தனது சரீரத்திற்குள் வியாபித்து இருக்கும் “ஓஜஸ்” சக்தியை பிரபஞ்ச சக்தியோடு இணைக்க தெரிந்த மனிதன் மன சக்தியின் மூலம் இயற்கையின் இயக்கங்களையே கட்டுப்படுத் தெரிந்த மனிதன் இறைவனின் வரமாக பூமியில் அங்கிங்கெனாதபடி எங்கும் பரந்து கிடக்கும் மூலிகைகளின் சக்தியை அறிந்தும் உள்ளான், பயன்படுத்தியும் வருகிறான்,

ஒரு காலத்தில் நான் மூலிகைகள் மனித உடலின் மருத்துவத்திற்கும் ரசவாதத்திற்கும் மட்டுமே பயன்படக்கூடியது என கருதியிருந்தேன், 1992-ஆம் வருடம் ராபர்ட் வில்சன் என்ற அன்பருக்காக சித்த வைத்தியம் பற்றி அறிந்த அவரின் உறவினர் ஆவி ஒன்றை அழைத்து பேசிக் கொண்டிருந்தோம், அந்த ஆவி பல விஷயங்களைப் பற்றி பேசிக் கொண்டு இருந்த போது துண்டாக வெட்டப்பட்ட உடல் உறுப்புகளை அனுத்துளுத்தான் தழை என்ற மூலிகையால் தொடும் ஷனத்திலேயே உறுப்புகள் ஒட்டிக் கொள்ளும் என்று கூறியது,

மேலும் அந்த மூலிகைச் செடி கொல்லி மலை. உதக மண்டலம் போன்ற இடங்களிலும் செஞ்சிக் கோட்டையில் ராஜாக் கோட்டையில் உள்ள சுரங்க வழியில் இந்த மூலிகை உள்ளது என கூறியது, மேலும் அந்த ஆத்மா மூலிகைகளில் மந்திரப் பிரயோகம் பற்றியும் மூலிகைகளால் கிடைக்கும் மந்திர சித்திகளை பற்றியும் மிக விரிவாக கூறியது,

மூலிகைகளில் மந்திர பிரயோகம் என்கிற விஷயம் எனக்கு புதுமையாக இருந்தது, அவைகளைப் பற்றி ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்கு வலுத்த வேளையில் ஆவி சொன்ன அனுத்துளுத்தான் தழை உண்மையா அப்படி ஒன்று உண்டா என்ற கேள்வி மண்டைக்குள் பூரான் ஊர்வதைப் போல் உறுத்திக் கொண்டேயிருந்தது,

அந்த வருடத்தில் ஆகஸ்ட் மாதம் என நினைக்கிறேன், தினமலர் பத்திரிகையை புரட்டி கொண்டிருந்த போது உதக மண்டலத்தில் வெளிநாட்டு நபர் ஒருவரின் அனுபவம் என்ற செய்தி என்னைப் பெரும் வியப்பில் ஆழ்த்தியது, மலைச்சரிவுகளில் அவர் நடந்து கொண்டிருந்த போது எதிர்பாராமல் எருமைமாடு ஒன்று அவர் தொடையில் முட்டி பெரும்காயத்தை ஏற்படுத்தி விட்டதாகவும் செடிகொடிகளுக்கு இடையில் பொறுக்க முடியாத வலியில் நடக்க முயாமல் நடந்து மேலே ஏறுகின்ற போது. திடீரென்று கால்களில் இருந்த வலிமறைந்ததாகவும் வலி என்ன ஆனது என்று காலைப் பார்த்த போது காயம்பட்டதற்கான அடையாளமே இல்லாது மறைந்து விட்டதாகவும் அந்த வெளிநாட்டுக்காரர் கூறி இருந்தார்,

செடிகளுக்கு இடையில் நடந்து வரும் போது பலவிதமான செடி கொடிகள் தமது காயத்தை தொட்டதாகவும் அதில் ஏதோ ஒரு செடியின் வேகம் தான் தனது காயத்தை குணப்படுத்தியிருக்க வேண்டும் என கருதி அந்த செடி என்னவென்று அறிய 4 நாட்கள் தேடியதாகவும். இறுதி வரையில் தனக்கு கிடைக்கவே இல்லையென்று கூறியிருந்தது, மேலே சொன்ன ஆவி கூறியது என்னை நம்ப வைத்தது, அவரை குணப்படுத்தியது அனுத்துளுத்தான் தழையாகத்தான் இருக்க வேண்டும் என்று இன்றுவரை உறுதியாக நான் நம்புகிறேன்,

இந்த விஷயம் மந்திரத்திற்கும் மூலிகைக்கும் மிக நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும், அதை அறிந்து கொள்ள வேண்டும் என்ற என் வேட்கையை மிக அதிகமாக அதிகரித்தது, இதன் அடிப்படையில் பலவித ஆராய்ச்சிகளையும் நான் மேற்கொண்டேன், அதர்வண வேதமந்திர சம்ஹிதை என்கிற சாகையில் குறிப்பிடப்பட்டுள்ள மரமல்லி இலையை எடுத்து ஜீவபீஜம் மந்திரத்தை உருஏற்றிய போது எனக்கு கிடைத்த விசேஷமான தேவதைகளின் பிரசன்னம் புது விதமான உத்வேகத்தை தந்தது, அந்த உத்வேகம் மூலம் என்

சுய அனுபவமாகவும் பல பழைய கிரகந்தங்ளின் மூலமாகவும் பல அரிய விஷயங்களை அறியப் பெற்றேன், அதை அனைத்தையும் இல்லையென்றாலும் ஒரு சிலவற்றையேனும் வாசகர்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

மனிதர்களாகிய அனைவருக்குமே பணத்தின் மீது எப்போதுமே ஒரு ஈடுபாடு உண்டு, அதுவும் உழைக்காமல் திடீர் அதிர்ஷ்டங்கள் மூலமം கிடைக்கின்ற பணம் என்றால் யாருமே அதை வேண்டாம் என்று ஒதுக்குவதில்லை, புதையலைத் தேடி பெரும் பயணம் மேற்கொண்ட சரித்திர வீரர்கள் எத்தனைப் பேரையோ நாம் படித்து இருக்கிறோம் பார்த்தும் இருக்கிறோம், முதலில் புதையலுக்காக போட்டியிட்டு புதைந்து போன சாம்ராஜ்ஜியங்களும் உண்டு, அப்படிப்பட்ட புதையல் எங்கு இருக்கிறது, எப்படியிருக்கிறது என்று தெரிந்து கொள்ளும் ஆர்வம் எல்லோருக்கும் உண்டு, புதையல் எங்கு இருக்கிறது என்று காட்டி தரும் ஒரு மூலிகை இருக்கிறது, அதன் பெயர் நிலம் புரண்டி என்பது, புதையல் என்பது அக்கால மன்னர்கள். நிலப் பிரபுக்கள். மிகப் பெரும் கருமித்தனம் கொண்டவர்கள் மற்றும் சேமிப்பில் அக்கறை கொண்டவர்கள் தங்களது செல்வத்தை மற்றவர்களிடம் இருந்து பாதுகாக்க பூமியில் புதைத்து வைப்பதாகும், அவர்கள் அப்படி செய்யும் போது வெறும் நிலத்தை தோண்டி மண்ணைப்போட்டு காசுகளை மூடி விடுவது இல்லை,

அப்பொருளை பாதுகாக்க பல அமானுஷ்ய சக்திகளை மந்திர உச்சாடனம் மூலம் அவ்விடத்தில் ஸ்தாபிதம் செய்துவிடுவார்கள், பூதம் புதையலை பாதுகாக்கும் கதையெல்லாம் வெறும் கற்பனைகளஞ்சியங்கள் அல்ல அதிலும் ஓரளவு உண்மைகள் உண்டு என்பதை நான் அனுபவத்தில் உணர்ந்து இருக்கிறேன்,

அமானுஷ்ய சக்திகளின் பாதுகாப்பில் புதையல் இருப்பதால் தான் அதை எல்லோரும் எடுத்து விடுவது கடினமாக இருக்கிறது, இந்த சக்திகளின் பாதுகாப்பில் இருக்கும் புதையல்கள் ஒரே இடத்தில் இருப்பதும் இல்லை, இந்த சக்திகளால் பல இடங்களுக்கு நகர்த்தப்படுவதும் உண்டு, புதையல்களை பாதுகாக்கும் அமானுஷ்ய சக்திகளை அதற்குரிய முறையில் திருப்தி படுத்தினால் மட்டுமே நம்மால் எடுக்க முடியும்,

நிலம் புரண்டி மூலிகைச் செடி புதையல் எங்கே இருக்கிறது என்பதை நமக்கு காட்டும் ஒரு கருவியே ஆகும், இந்த மூலிகை சாதாரணமாக பூமியில் மற்ற செடி கொடிகளுக்கு இடையில் முளைத்திருக்கும், இது மனிதர்களின் வாசனை பட்ட மாத்திரத்தில் மண்ணை கீறிக்கொண்டு உள்ளே போய்விடும், அதனால்தான் இதற்கு நிலம் புரண்டி என்ற பெயரை நமது முன்னோர்கள் வைத்து இருக்கிறார்கள், இதை கண்டு பிடிக்க வேண்டும் என்றால் சாதாரணமாக நாட்டு மருந்துக்கடைகளில் கிடைக்கும் தேத்தான் கொட்டைகளை வாங்கி கையில் வைத்துக் கொண்டு நடந்தால் தேத்தான் கொட்டையினுடைய வீரியத்தால் நிலத்திற்குள் போகாமல் வெளியே நின்று விடும்,

இத்தகைய நிலம்புரண்டி மூலிகையை ஞாயிறு. செவ்வாய் மற்றும் வியாழன் கிழமையில் சூர்ய உதயத்திற்கு முன் இடத்தை சுத்தம் செய்து அச்செடிக்கு சாப நிவர்த்தி செய்து மந்திரத்தால் உயிர் கொடுத்து காப்பு கட்டி தூப தீபங்கள் காட்டி பறித்து வந்து குழித்தைலம் இறக்க வேண்டும், அந்த தைலத்தில் பச்சை கற்பூரம் ஜவ்வாது. கோரோசனை மூன்றும் சம எடையில் சேர்த்து குழைத்து அஞ்ஜனமாக்கி வைத்துக்கொள்ள வேண்டும், அந்த அஞ்ஜனத்தில் ஆஞ்சநேய மூல மந்திரம் மற்றும் அஞ்ஜனா தேவி மூல மந்திரம் முறையே 1008 முறை ஜபித்து உருஏற்ற வேண்டும், தேவையான போது அந்த அஞ்ஜானத்தை சிறிது எடுத்து வெற்றிலையில் தடவி மேற்குறிப்பிடும் மூல மந்திரத்தை 108 முறை ஜபித்து வெற்றிலையில் பார்த்தால் தொலைக்காட்சி பெட்டியில் படம் தெரிவது போல் புதையல் இருக்கும் இடத்தை நமக்கு மிக துல்லியமாக காட்டும், மேலும். இந்த மூலிகையின் வேரை கன்று போடாத பசுஞ்சானத்தோடு எரித்து சாம்பலாக்கி நீரில் கரைத்து மேற்குறிப்பிட்ட மூல மந்திரத்தை முறைப்படி ஜபித்து புதையல் இருப்பதாக நாம் கருதும் இடத்தில் இரவில் தெளித்து விடவேண்டும், காலையில் சென்று பார்த்தால் அங்கு புதையல் இருக்கும் பட்சத்தில் பாளம் பாளமாக வெடித்து இருக்கும். புதையல் இல்லையென்றால் சாதாரணமாக இருக்கும்

புதையல் மிக ஆழமாக பல நூற்று அடிகளுக்கு கீழே இருந்தால் அந்த இடத்தில் ஸ்ரீலேகா என்ற மூலிகையை புதைத்து விட்டால் குறைந்தது 6 மாதத்தில் நாம் தோண்டி எடுக்கும் சொற்ப ஆழத்தில் புதையல் மேலே வந்துவிடும், ஸ்ரீ லேகா என்பது 16 வகை மூலிகைகளின் கூட்டு வடிவமாகும், இது இமயமலை சாரல்களில் மட்டுமே கிடைக்கிறது, மூலிகை சாஸ்திரத்திலும். மந்திர சாஸ்திரத்திலும் நிபுணத்துவம் பெற்றவர்கள் இந்த அரிய பொக்கிஷத்தை பாதுகாக்க வைத்து இருப்பார்கள்

இன்றைய காலகட்டத்தில் மனிதர்களை மனிதர்களே வசியம் செய்யும் இடுமருந்து என்பதை மிக அதிகமாக கேள்விப்படுகிறோம், இவைகள் முன்பெல்லாம் கிராமப்புறங்களில் தான் அதிகமாய் இருந்தது, இன்றோ நகரங்களில் கூட இந்த இடுமருந்து ஊடுருவி விட்டது, இந்த மாதிரியான விஷயங்களால் பல குடும்பங்கள் தொல்லைகளை சந்தித்து அழிந்தும் போயிருக்கிறது, இந்த இடுமருந்தை எடுப்பது ஒன்றும் பெரிய விஷயமல்ல, புல்லாமணக்கு என்கிற மூலிகையை நிழலில் உணர்த்தி கல் உரலில் இடித்து வஸ்திர காயம் செய்து நெய்யில் குழைத்து காலை. மாலை இருவேளையும் தொடர்ந்து 3 நாட்கள் பாதிக்கப்பட்டவர்கள் சாப்பிட்டால் போதுமானது, 3 நாட்களிலே இடுமருந்தின் வீரியம் குறைந்து சகஜ நிலைக்கு அவர்கள் திரும்பி விடுவார்கள், இந்த புல்லாமணக்கு என்பது பல்லி முட்டையைப் போன்று இருக்கும், இருப்பினும் முறைப்படி காப்பு கட்டி எடுக்கப்பட்ட மூலிகையாக இருந்தால் மிக சக்தி வாய்ந்ததாக இருக்கும்,

ராமாயணத்தில் தசரதன் குழந்தை வரம் வேண்டி புத்திரகாமேஷ்டி யாகம் செய்தான் என்பதை நாம் அறிவோம், அந்த யாகத்தில் கூறப்படும் மிக

முக்கியமான புத்திர வர்ஷா என்கிற மந்திரத்தை விபூதி இலை என்ற மூலிகையில் உருஏற்றி அரை மண்டலம் சாப்பிட்டால் பெண்களின் கர்ப்பப்பையில் இருக்கும் புழுக்களை நீக்கியும் ஆண்களுக்கு மலட்டு தன்மைப் போக்கியும் புத்திர சந்தானத்தையும் உண்டாக்கும், இம்முறையை இன்றும்கூட பலர் பயன்படுத்தி அற்புதமான பலனை அடைந்து வருகிறார்கள், இதை எம்மிடம் பெற்ற ஒரு அன்பர் கைமேல் பிள்ளையை பெற்றுள்ளார்,

இன்று நமது தமிழகமெங்கும் வறட்சி, அதனால் விவசாயம் பாதிப்பு கிணறுகளில் தண்ணீர் இல்லை, பயிர்கள் பட்டுப்போயின என்ற அழுகுரலும் அங்கலாய்ப்பும் எங்கும் கேட்கிறது, கிணறுகளில் தண்ணீர் ஊர பன்னீர் இலையில் சடாட்சர மந்திரத்தை 1008 முறை உருஏற்றி நீர் இல்லாத கிணற்றில் போட்டால் 9 நாட்களுக்குள் நீர் இல்லாத கிணற்றில் நீர் சுரக்கும், பயிர்களின் மீது பூச்சிகள் பரவினாலும் தென்னை மரங்களில் குருத்துப் புழுக்கள் அதிகரித்தாலும் மா. தென்னை. பலா போன்ற மரங்களில் காய்கள் குறைந்தாலும் ஆடு திண்டாப்பாலையை பஸ்பமாக்கி பிரணவ மந்திரத்தை 1008 முறை உருஏற்றி பாதிக்கப்பட்ட மரம். செடி. கொடிகளின் மேல் தெளித்தால் பூச்சிகள் அழிந்து நன்றாக காய்கள் அதிகரிக்கும்

இத்தகைய மூலிகைகளை உயரிய நிலையில் இருக்கும் தெய்வீக ஆத்மாக்களோடு மந்திர பிரயோகம் செய்பவர்களும் இருக்கிறார்கள், ஆத்மாவை அழைத்துப் பேசும் கலைதெரியாத சாதாரண மக்கள் கூட மன சுத்தியோடும் உடல் சுத்தியோடும் இதை செய்யலாம், அப்படி செய்தாலும் நல்ல பலனை கொடுப்பதை பலமுறை நான் பார்த்திருக்கிறேன், ஆனாலும் பயிற்சி பெற்ற நல்ல மனிதர்களை இதைச் செய்தால் கைமேல் பலன் கொடுப்பது கண் கூடான விஷயம்

எனக்கு தெரிந்த இளைஞர் ஒருவர் மிகவும் சுறுசுறுப்பானவர், சதா சர்வகாலமும் ஏதாகினும் ஒரு வேலையை செய்து கொண்டு இருப்பார், அவர் வேலை செய்யும் வேகம் சாட்டையால் சுழற்றப்பட்ட பம்பரம் ஒன்று அதிவேகமாக சுற்றுவது போல் இருக்கும் அவரைப்பற்றி நான் சிலநேரம் யோசிப்பதுண்டு, இரவில் கூட இவர் ஓய்வாக தூங்குவாரா? இல்லை அப்போதும் ஏதாவது வேலை செய்து கொண்டுதான் இருப்பாரா? என்ற இறைவன் வேலை செய்வதற்காகவே இவரை படைத்துள்ளாரோ தானும் இவரை போல்தான் சதா வேலை செய்து கொண்டிருக்கிறேன் என்று காட்டுவதற்காக இவரை பூமியில் நடமாட விட்டிருக்கிறாரோ என்றெல்லாம் எண்ணி வியந்ததுண்டு

இப்படி சுறுசுறுப்பின் இலக்கணமான அந்த இளைஞர் திடீரென்று ஒருநாள் மயங்கி விழுந்து விட்டார், அதன் பின்பு அவரிடம் படிப்படியான சில மாற்றங்களை நான் கவனித்தேன், சோர்ந்து உட்கார்ந்து விடுவதும் வேலையிடத்திலேயே சுருண்டு படுத்துவிடுவதும் உண்டு, நாளடைவில் அவர் கைகால்கள் நரம்புத் தளர்ச்சியால் நடுங்குவதைப் போல் நடுக்ககம் எடுக்க ஆரம்பித்தது, அவரிடம் நான் விசாரித்தேன், உனக்கு என்ன ஆயிற்று என்று அவர் அதற்கு ஒன்றுமே புரியவில்லை, உடல் நடுங்குவதும். நாவறட்சி

ஏற்படுவதும் அதற்கு மேல் கண்களின் பார்வை சக்தி குறைந்து விடுவதுமாக இருக்கிறது என்றார், அவர் மீது களிவிரக்கம் ஏற்பட்ட நான் எனது வசமாக இருந்த ஒரு தேவரையை அழைத்து அவருடைய உடலுக்கு என்ன என்று கேட்டேன், அதற்கு அந்த தேவதை அவருடைய மூளை நரம்புகளில் ஒன்றில் சீதளக் கிருமிகள் தாக்கி ரத்த ஓட்டத்திற்கு சிறு தடை ஏற்பட்டுள்ளது என்று குறிப்பிட்டது, அவருக்கு மேற்கொண்டு சிகிச்சை செய்ய விரும்பி அவரை ஒரு வாரமாக தேடினேன், கிடைக்கவில்லை,

ஒரு வாரம் சென்று வந்து தான் மருத்துவமனைக்கு சென்றிருந்ததாகவும் பரிசோதனையில் தனது மூளை நரம்பில் நோய்த் தொற்று என்கிற பஆ உள்ளதாகவும் அதற்கு உடனடியாக சிகிச்சை மேற்கொள்ள வேண்டும் என்றும் சில வருடங்கள் மாத்திரைகளை சாப்பிட்டு வர வேண்டும் என்றும் மருத்துவர்கள் கூறிவிட்டதாக கவலையுடன் குறிப்பிட்டார், என் மீது தீவிர பக்தியும் அன்பும் கொண்ட அந்த நண்பரை குணமாக்கும்படி வேண்டினார் அவருக்காக சிவ பெருமானின் பரிவாரங்களான 12 ருத்திரர்களில் தலைவரான ஸ்ரீ மாகருத்ரரின் நேரடி அம்சமான ஸ்ரீ பிரபாசன் என்று போற்றுதலுக்குரிய தேவ கனத்தை அழைத்து பேசினோம், அவர் அந்த இளைஞரின் நோய் நீங்கிட சில மூலிகைகளை (அவர் கொடுத்த உத்தரவின்படி அந்த மூலிகைகளின் விபரம் இங்கு தரமுடியாமைக்கு வருந்துகிறோம்) அதர்வண வேத மந்திரங்களால் செறிவூட்டச் சொல்லி 2 மண்டலம் மட்டுமே அவரை சாப்பிடச் சொன்னார், அதன்படி அந்த இளைஞருக்கு செய்து கொடுத்தேன், ஒரு மாதத்தில் அந்த நண்பர் உடல் நிலையில் முன்னேற்றம் கண்டார், 2 மண்டலத்திற்கு பின்பு அவர் பரிபூரணமாக குணமடைந்து பழையபடி சுறுசுறுப்பு அடைந்து விட்டார், இன்று அவர் நல்ல நிலையிலே உள்ளார், இப்படி எத்தனையோ மந்திரமும் மூலிகையும் செய்த மகத்துவத்தை சொல்லிக் கொண்டே செல்லலாம்

இறைவன் இந்த பூமியில் எந்தவொரு சிறிய வஸ்துவையும் காரணமில்லாமல் படைக்கவில்லை, ஒன்றைத்தழுவி ஒன்று இருப்பதைப் போல் தாவர ஜங்கமங்கள் அனைத்தும் ஒன்றுக்கு பயன்படும் வண்ணமே இறைவன் சிருஷ்டித்துள்ளான், ரிக் வேதத்தில் வரும் பல ஸ்லோகங்கள் தாவரங்கள் சூரியனிடமிருந்து சக்தியை ஜீவர்களுக்கும் கொடுப்பதாக சொல்லப்பட்டு இருக்கிறது, அதாவது அண்ட சராசரங்கள் அனைத்திலும் பரவியுள்ள பரமாத்மாவின் பரமசத்தை கிரஹித்து பூமிக்கு வழங்கி கொண்டிருக்கும் அமுத சுரபிகளே விருட்சங்கள் என்று வேதம் சொல்கிறது, விவிலியமும். திரு-கூர்-ஆனும் இதைப்போன்ற கருத்துக்களை வலியுறுத்துகின்றன,

சுக்ருத சம்ஹிதையில் ஐந்தறிவும் ஆறறிவும் உடைய ஆத்மாக்களின் உடலின் நோயையும் மரங்களிலும் செடி கொடிகளிலும் மண்ணிலும் நோய்க்கான மருந்தையும் பரமான்மா வைத்துள்ளதாக வைரத்தை உடைத்தது போல் தெளிவாக குறிப்பிடப்பட்டுள்ளது, மேலும் சுசருதர் ஔஷதங்கள் ரசங்களாலும் மந்திரங்களாலும் நிரப்பபட வேண்டும் என்றும் கூறுகிறார்.

அந்தக் கால மருத்துவர்கள் மந்திரங்களிலும் வல்லுநர்களாக இருந்தார்கள், நவீன விஞ்ஞான கருவிகள் எதுவுமே இல்லாது சுசருதர் செய்த பல உறுப்பு மாற்று அறுவை சிகிச்சை அனைத்திலும் மந்திரங்கள் மூலிகைகளின் உதவிகளாலேயே செய்யப்பட்டதாக பழைய கிரந்தங்கள் கூறுகின்றன

நோய் தீர்க்கும் மந்திரங்களால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பல ஆலயங்கள் கிரேக்க நாட்டில் இருந்துள்ளன, அந்த ஆலயங்களில் படுத்து உறங்குவதனாலேயே நோய்கள் குணமாகி விடுவதாக கிரேகக் நாட்டின் மந்திர நிபுணர் கேலன் கூறியுள்ளார், சீன நாட்டில் கி,மு,450 ஆண்டில் வாழ்ந்த எம்ப்படிடாக்கின்ஸ் மனிதர்களின் தோல் மீதுள்ள துளைகள் வழியாக பல தீய சக்திகள் புகுந்தே நோயை உருவாக்குகிறது என்றும் அதை மந்திரங்களால் தொட்டே குணப்படுத்தி விடலாம் என்று கூறியுள்ளார்

இன்று நடைமுறையில் உள்ள ரெய்கி. பிரானிக்ஹீலிங் என்ற முறைகளும் அண்டத்தில் உள்ள காஸ்மிக் மற்றும் பலவித பிரணவம் சார்ந்த பல கதிர்களை உடலுக்குள் செலுத்தவதே ஆகும், மந்திரங்களும் அண்ட நாதத்தின் மறுவடிவு ஆகும், ஆகவே அண்டசக்தியின் பிம்பங்களுடன் மூலிகைகளும் மந்திரங்களும் இணைந்தால் சாத்தியம் இல்லாதவற்றை சாத்தியமாக்கி விடலாம்.

மந்திரங்களில் இரண்டு வகை உண்டு, குட்டிச்சுவரை கோபுரமாக்கும் நல்ல மந்திரங்கள் ஒருவகை சாம்பிராஜ்யங்களை சாம்பல் மேடாக்கும் தீய மந்திரங்களை ஒரு வகை, இத்தகைய இருவகை மந்திரங்கள் உலகெங்கும் நம்மிடையே உள்ளது, தீய மந்திரங்களின் கொடுமையான விளைவுகள் பல குடும்பங்களை நாசமாக்கி இருக்கின்றன, அத்தகைய தீய மந்திரங்களை ஒடுக்குவதற்குரிய மந்திர மூலிகைகள் ஏதேனும் உண்டா? என்று நான் தேடுதலில் ஈடுபட்ட போது ஆன்மீக ரீதியிலும். மற்ற வகையிலும் பல நேரங்களில் எனக்கு வழிகாட்டியிருக்கும் இன்னொரு உலக வாசிகளான தெய்வீக ஆத்மாக்கள் பலமூலிகைகளை எமக்கு காட்டின அவற்றில் தீவினைகளான பில்லிசூன்யத்தை முற்றிலுமாக ஒழிக்கும் சில மூலிகை வகைகளை உங்களோடு பகிர்ந்து கொள்வதில் பெருமைப்படுகிறேன்.

ஆடு தீண்டாப்பாலை. திருநாமப் பாலை. வில்வம். துளசி. வேம்பு. திரவந்தி. அழுகண்ணி. ஏர்சிங்கி. சூக்குளி. வல்லாரை. கொடுப்பை. கரிசிலாங்கண்ணி. தாழைமடல். நாபி. அஷ்வலோகா மற்றும் பல மூலிகைகள் கலந்து ஸ்ரீ ருத்மூலமந்திரம் ஹோமத்தில் ஆகுதி செய்யப்பட்ட மந்திர ஔஷத பஸ்பத்தை மக்கள் பயன்பாட்டிற்கு இன்றும் கொடுத்து வருகிறோம், இந்த மூலிகை பஸ்பத்தை கடல் நீரில் கலந்து சில மந்திர உச்சாடனத்துடன் சூன்யம் இருக்கும். பகுதியில் தெளித்தால் 9 நாட்களிலேயே தீய சக்திகள் விலகி நல்ல சக்திகள் குடிகொண்டு பல சௌக்ய சௌபாக்கியத்தை தந்து வருவதை இன்றும் நடைமுறையில் பலர் அனுபவித்து வருகிறார்கள்.

இத்தகைய தெய்வீக ஆத்மாக்கள் பூமியின் சுத்திகரிப்புகாகவும் அதாவது "வாஸ்து" நிவர்த்திக்காகவும் பல விதமான மூலிகை பஸ்பங்களை தந்துள்ளார்கள், பல இலட்சம் செலவு செய்து கட்டப்பட்ட கட்டிடங்கள் வாஸ்து நிவர்த்திக்காக இடித்து தரைமட்ocடம் ஆக்கப்படுவதை இம்மூலிகை பஸ்பங்கள் தடுத்து வாஸ்து தோஷத்தை முழுமையாக நிவர்த்தி செய்துவிடுகிறது, பல கஷ்டங்களை தாண்டி கட்டப்படும் வீடுகளில் காலம் முழுக்க குடியிருக்க முடியாமல் தேச சஞ்சாரியாக அவதிப்படுபவர்களும். கழுத்தில் தொங்கவிடப்பட்ட கல் கிணற்றுக்குள் ஆழத்தில் அமுக்கி விடுவதைப் போல் கட்டிய வீட்டை விற்க முடியாமல் மூச்சு திணறுபவர்களும் தனது வாழ்நாளில் ஒரு சொந்த விடு கட்டி விடமாட்டோமா என்று ஏங்குபவர்களும் இந்த மூலிகை ஔதஷதங்களால் நல்ல பயன்களை பெற்று இருப்பதை பார்க்கும் போது தெய்வீக ஆத்மாக்கள் மனித குலத்திற்கு செய்து வரும் மகத்தான சாதனையை எண்ணி நன்றி கூறாமல் இருக்க முடியவில்லை

வெந்ததை தின்று வேளை வந்தால் சாவோம் என்று அர்த்தம் அற்ற பாதையில் அவசரகதியாக நமது வாழ்க்கை ரதம் தாறுமாறாக ஓடிக் கொண்டிருக்கிறது, நம்மால் எது சரி? எது தவறு? என்று தீர்மானிக்க முடியவில்லை, எதை விடுவது எதை தொடுவது என்ற முடிவுக்கும் வர முடியதில்லை, நுனியில் உட்கார்ந்து அடி மரத்தை வெட்டுபவனைப் போல் பித்து குளித்தனமாக நாம் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம், நமது அஜாக்கிரதையினாலும். அசட்டையினாலும் இழந்த செல்வங்கள் அது எத்தனையோ௦ நான் இங்கு குறிப்பிடும் மந்திரங்களும். மூலிகைகளும் நம் கையில் இருந்து நழுவி விடும் சூழலிலேயே இன்று ஊசலாடிக் கொண்டிருக்கிறது, வெளிச்சத்திற்கு வீட்டை கொளுத்தியவன் போல் நிறைய செல்வங்களை நாம் இழந்து விட்டோம்.

இந்த கொஞ்ச நஞ்ச செல்வங்களையாவது இழக்காமல் இருக்க நாம் விழிப்புடன் இருக்க வேண்டும், இன்று நாம் விழித்துக் கொண்டால் இன்னும் ஒரு 1000 ஆண்டிற்கு சுகமாக வாழலாம், இல்லை நான் தூங்கத்தான் செய்வேன் என்று அடம்பிடித்தால் வாழ்ந்ததற்கான அடையாளங்களைகூட பார்வையிட எந்த ஜீவனும் இருக்காது, நம் முன்னோர்கள் நமக்கு தந்து விட்டு சென்ற இந்த அரிய செல்வங்களை நமது அறிவீனத்தால் குழந்தைகளுக்கு கொடுக்காமல் சென்று விடகூடாது, இவைகளைப் பாதுகாக்க ரகசியங்களையாவது தெரிந்து வைத்திருக்க உழைப்போமாக!

# 2 - குப்பை மேட்டை கோபுரமாக்கும் மூலிகை



என்னிடம் அடிக்கடி ஒரு இளைஞன் வருவான், வறுமையான சூழலில் அவன் பிறந்திருந்தாலும் வறுமையை கொஞ்சம் கூட வெளிக்காட்டாத அவன் பேச்சுத் தோரணை எனக்கு ரொம்ப பிடிக்கும், எவ்வளவு பெரிய கஷ்டமான வேலை அவனிடம் சொன்னாலும் முகம் சுளிக்காமல் எத்தகைய சிரமத்தையும் தாண்டி அந்த வேலையை முடித்து விடுவான்,

ஒருநாள் அவனிடம் நான் தனியாக பேச நேரிட்டது, அப்போது தான் அவன் மனதுக்குள் கிடந்த அத்தனை ஆசை. அபிலாஷைகளை என்னிடம் கொட்டித் தீர்த்தான், தான் கிராமத்தலையாரியின் மகன் என்பதையும். தனக்கு மிகச்சிறிய வயதிலேயே திருமணம் ஆகிவிட்டது என்பதையும் என்னிடம் சொல்லி நான் எப்படியும் அரசியலில் பெரிய தலைவராக ஆக வேண்டும் என்றும் அதற்கு நான் உதவி செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டான்,

அவன் ஜாதகம் உட்பட அனைத்தையும் நான் பரிசோதித்து பார்த்தேன், அவன் அரசியல் தலைவராவதற்கான எந்தவித சாத்தியக்கூறும் இல்லையென்பதை தெளிவாக புரிந்து கொண்டேன், இருப்பினும் சில பொதுவேலைகளில் அவன் காட்டிய சிரமத்தையும். தாங்கிக் கொண்ட துயரமும் அவனுக்கு எந்த வகையிலாவது உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் எனக்குள் மிக ஆழமாக வேர்விட்டு விட்டது,

அந்த நேரத்தில் பஞ்சாயத்து தேர்தல் அறிவிப்பும் வந்தது, அந்த இளைஞனை அழைத்து ஒரு வசிய அஞ்ஜன தாயத்தை கட்டிக்கொள்ள கொடுத்தேன், ஒரு குறிப்பிட்ட கட்சியின் பெயரைச்சொல்லி அந்தக் கட்சியின் மாவட்ட பொறுப்பிலிருப்பவரை போய் பார், கட்சியில் சீட்டு கிடைக்கும். தேர்தலிலும் வெற்றி பெறுவாய், ஆனால் மிகக்கடினமாய் உழைப்பு இருக்கும் என்று ஆசிர்வதித்து அவனை அனுப்பி வைத்தேன், அவன் மீண்டும் என்னை வந்து பார்த்தபோது ஒன்றியக் கவுன்சிலராக தான் தேர்ந்தெடுக்கப்பட்ட வெற்றிச்செய்தியுடன் வந்தான், அப்பொழுதுதான் அஞ்ஜனங்களுக்கு

இருக்கின்ற முழு சக்தியை நான் உணர்ந்து கொண்டேன், குடும்பத்திலோ. அரசியலிலோ. பொருளாதார பலத்திலோ. ஏன்? ஜாதக அமைப்பிலும் கூட எந்த விதமான பின்பலமும் இல்லாமல் வெறும் மந்திரம். அஞ்ஜனம் இவைகளால் ஒரு நரியையும் பரியாக்கிவிடலாம் என்ற ஆண்டவனின் அனுக்கிரக சக்தியை எண்ணி வியக்காமல் என்ன செய்ய முடியும்,

அப்படி அந்த இளைஞனுக்கு என்ன அஞ்ஜனம் கொடுத்தேன் என்று நீங்கள் கேட்பது எனக்கு புரிகிறது, அவனுக்கு நான் கொடுத்தது ஸ்ரீ மகாலஷ்மி அஞ்ஜனமாகும்,

இந்த மகாலாஷ்மி அஞ்ஜனம் நம்மை சகல கிரக தோஷ உபாதையிலிருந்தும் விடுவித்து இஷ்ட சித்தி ஏற்படுத்தித்தரும், மேலும் தொழில் மேன்மை. தனசமர்த்தி. புகழ். பதவி. அனுகூலம். வியாபாரம். உத்தியோகம் ஆகிய எல்லாத்துறைகளாலும் தனலாபத்தையும். மன ஆசைகளையும் மிக சுலபமாக நாம் அடைய வழிவகை செய்யும், துர்மரணம். தீய ஆவிகளின் தொல்லை. செய்வினை தோஷம். முன்னோர்களின் சாபம். கர்ம வியாதி ஆகிய சகலமும் இந்த அஞ்ஜனத்தால் தீரும், இதில் உள்ள மகாவிஜயதன ஆகர்ஷன மூலிகையின் மகிமை பணம். பதவி ஆகியவற்றை ஈர்த்துத்தர வல்லது, இதை எந்த வயதினரும் எந்த பாலினரும். எந்த மதத்தினரும் உபயோகப்படுத்தலாம்,

இந்த அஞ்ஜனம் செய்ய கரும் துளசி. வேர். நீர். சாம்பிராணி இலை. வெண் தாமரைக்கொடி. சந்தன இலை. அதிமதுரவேர் ஆகிய ஐந்து பொருட்கப்ளுயம் சமபங்காக எடுத்துக்கொண்டு

“ஹரீ - ஓம் - மகா - தேவீ - மகா
லட்சுமி - சர்வ - மங்கள -
பிரதயினி - மம - பிரயத்தன -
காரிய சித்தி -”

என்ற மந்திரத்தை 1008 தடவை பௌர்ணமி தினம் சந்திரோதய சமயம் கிழக்கு முகமாக உட்கார்ந்து ஜபம் செய்து பின் மேற்படி குறிப்பிட்ட ஐந்து பொருட்களையும் புது மண்சட்டியில் அத்திமர சமித்தால் நெருப்பு ஏற்படுத்தி ஒவ்வொரு பொருளாக போட்டு கரியாக்கி நன்றாக தூள் செய்து தனியாக எடுத்துக் கொண்டு பசு நெய்யில் கலந்து வெண்ணைபோல் உருட்டிக்கொள்ள வேண்டும்,

பின்பு சாம்பிராணி எண்ணெய். சந்தன எண்ணெய். அசல் வேப்பம் எண்ணெய். கடுகு எண்ணெய். வசம்பு எண்ணெய் ஆகிய ஐந்து எண்ணெய்களை சமமாக கலந்து முன்சொன்ன மூலிகை சாம்பல் உருண்டையை கொட்டி கலந்து வெள்ளி அல்லது பீங்கான் கிண்ணியில் அடைத்து வைத்துக்கொள்ள வேண்டும்,

பின்னர்

“ஹரி - ஓம் - மாக - தேவீ -
மகா - லட்சுமி - ஓம் - ஸ்ரீம் - க்லீம் -
ஹரீம் - ஸ்ரீம் - ஆகச்சா -
ஆகச்சா -
மம - மந்திரே - திருஷ்டத் -
திருஷ்டத் - ஸ்வாஹா”

என்ற மூல மந்திரத்தை நாற்பத்தெட்டு தினங்கள் சந்தியாவந்தன நேரத்தில் வடக்கு முகமாக உட்கார்ந்து தினசரி 2016 தடவைகள் ஜபம் செய்து அஞ்ஜனத்தில் ஊதிவிடவும் இதேபோல் நாற்பத்தெட்டு நாள் செய்து நாற்பத்தொன்பதாம் நாள் ஐந்து அம்மன் கோவில் சென்று அம்மனை தரிசனம் செய்து பின்னர் அஞ்ஜனத்தை உபயோகப்படுத்திக் கொள்ளலாம்,

இதேபோன்று சரஸ்வதி அஞ்ஜனம் என்று ஒன்று உள்ளது, இதை மை போலவும் உபயோகம் செய்யலாம், சாம்பிராணி போல் தூபம் போட்டு வாசனையும் பிடிக்கலாம், இதனால் ஞாபகமறதி. சபைக்கூச்சம். திக்குவாய். படிப்பில் ஊக்கமின்மை. தொழில் சிறத்தையின்மை. குரல் வியாதிகள் விலகும்,

இது செய்ய தேவையான பொருட்கள் கருந்துளசி வேர். ஜாண்டு காய்கள். நெறிஞ்சி முள். வாலாட்டி மர இலை. வேப்பம்பழம். யானை வணங்கி வேர். பலாவேர். தொட்டாசுருங்கி வேர். மாதுரை இலை. கருவேம்புச்சாறு. சீந்தல் கொடி. நன்னாரித்தூள். விஷ்ணுகிரந்தி இலை. சிவகிரந்தி இலை. பிரம்ம பத்திரம்.

வாதநாராயணப்பட்டை. மருதம்பட்டை. சீகத்துக்காய்தூள். இலவஞ்சிக்கொடி. கடலைச் செடியின் வேர் ஆகிய இருபது மூலிகைகளையும் நிழலில் தனித்தனியாக உலர்த்தி சமஎடை எடுத்து இடித்து நன்றாக தூள் செய்து விபூதி பக்குவமாக்கி அத்துடன் இருநூறு கிராம் கற்பூரத்தை பொடி செய்து பசங்கன்று குட்டியின் சாணத்தில் பிசைந்து அதனுள் மேற்படி மூலிகைப்பொருட்களை கொழுக்கட்டையில் பூரணம் வைப்பது போல் வைத்து உருட்டி ஒன்பது நாட்கள் வெயிலில் காயவைத்து வைத்துக்கொள்ள வேண்டும்,

10-ஆம் நாள் சரஸ்வதியை தியானித்து காயவைத்து சாணி உருண்டைகளை எடுத்து ஒரு அகலமான பானை ஓட்டில் வைத்து கற்பூரம் சந்தனக்குச்சிகளைக் கொண்டு நெருப்பிலிட்டு அசல் விபூதியைப்போல் ஆக்கிக் கொள்ளவேண்டும், இந்த விபூதியை 1/4 கிலோ சாம்பிராணி எண்ணெயில் கலந்து கிளறி அத்துடன் ஜவ்வாது. கஸ்தூரி. குங்குமப்பூ. சந்தன எண்ணெய் இவைகளை விட்டு பிசைந்து அஞ்ஜனமாக்கிக் கொள்ள வேண்டும், பின்னர்.

“ஹரி - ஓம் - ஐம் - வேதகாரோ -
மந்த்ரகாரோ - வித்வாந் - ஸமர -
மர்தந - மஹா - மோக - நிவாஸீ -
ச மஹாகோரோ - வசீகர -”

என்ற மூல மந்திரத்தை தினசரி 82 வீதம் 82 நாளைக்கு சொல்லி அஞ்சனத்தில் ஊதிவிட வேண்டும், அதன்பிறகு புருவங்களுக்கு மத்தியில் இந்த அஞ்ஜனத்தை பொட்டாக இட்டுக் கொண்டாலே நினைவு ஆற்றல் பெருகும், சரஸ்தி தேவியின் பரிபூரண கிருபையால் அபாரமான அறிவு ஒளி வீசும்,

இப்படி மஹா நிவர்த்தி அஞ்ஜனம். சர்ப அஞ்ஜனம். பாலாரிஷ். தோஷ நிவாரண அஞ்ஜனம். சுதர்சன அஞ்ஜனம். வசீகர அஞ்ஜனம். குபேர அஞ்சனம். சர்வசிய அஞ்சனம். அஷ்டமாசித்து மகா அஞ்சனம். பாதாள மூலி அஞ்ஜனம். ஜெயமங்கள் அஞ்ஜனம் போன்று கணக்கிடலங்கா எத்தனையோ அஞ்ஜனங்களை ஏடுகளிலும். பல மகான்களின் அனுபவ அறிவுக்களஞ்சியங்களிலும் தெரிந்தும். தெரியாமலும் மறைந்து கிடக்கின்றன, அவைகளை எல்லாம் வெளிக்கொண்டு வந்து பாதிக்கப்பட்ட மக்களின் துயரங்களை துடைத்து நல்ல வாழ்க்கையை நாம் கொடுக்கலாம், ஆனால் இன்று நிலைமை என்ன?

## 3 - தொழிலை வளர்க்கும் அதிசய மூலிகை



எனது நண்பர் ஒருவருக்கு ஹோட்டல் தொழிலில் நல்ல அனுபவம் உண்டு. தனது சொந்த ஊருக்கு அருகிலுள்ள சிறிய நகரம் ஒன்றில் பத்து வருட காலமாக ஹோட்டல் நடத்தியும் வந்தார். அவருக்கு திடிரென்று ஒரு ஆசை. சிறிய அளவிலாவது சென்னையில் ஓட்டல் ஒன்று ஆரம்பிக்க வேண்டும். நிறைய சம்பாதிக்க வேண்டும் என்று தோன்றியது. தனது கையில் இருந்த

காசு போதாது என்று சொந்தமான தோட்டம் ஒன்றை விற்றார். அப்படியும் குறைந்த பணத்திற்கு மனைவி மக்களுடைய நகைகளை விற்று சென்னையில் ஜன நடமாட்டமுடைய முக்கிய வீதியில் தொழிலையும் ஆரம்பித்து விட்டார்.

ஆரம்பத்தில் மூன்று மாதங்களுக்கு வியாபாரம் நல்ல நிலையிலேயே நடந்தது. பிறகு நாள் ஆக ஆக குறைய ஆரம்பித்து விட்டது. சில நாட்களில் தயார் செய்த உணவு பொருட்களை கீழே கொட்ட வேண்டிய நிலையும் உருவாகிவிட்டது. ஒரு வேளை உணவு தரமில்லாமலோ, சுவையில்லாமலோ இருக்குமோ என்று யோசித்தார். சோதித்து பார்த்ததில் அப்படியொரு குறையும் இல்லை. இந்த ஓட்டலில் அருகிலுள்ள மற்ற ஓட்டல்களில் சுவையும் தரமும் குறைவாக இருந்த போதும் கூட அங்கு வியாபாரம் விறு விறு என்று நடந்து கொண்டிருந்தது. தொழிலாளர்களுக்கு சம்பளம் கொடுக்க கூட வழியில்லாமல். பல நேரம் கஷ்டப்பட்டார்.

அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாக சென்னை மீது கொண்ட மோகத்தால் சொந்த ஊர் வியாபாரத்தையும் கெடுத்து விட்டோமே என்று வருத்தப்பட்டார். ஊரில் இவரது மனைவி பல ஜோதிடர்களிடம் சென்று ஆலோசனை கேட்டு ஆறுதல் சொன்னாரே தவிர அனுபவத்தில் எந்த நன்மையும் அவரால் அடைய முடியவில்லை. இவரும் தனக்கு தெரிந்த எல்லா வகையிலும் முட்டி மோதி பார்த்தார். ஒன்றும் பிரயோஜனம் இல்லை.

நிலைமை நாளுக்கு நாள் விபரீதமாகி கொண்டிருந்ததே தவிர துளியளவும் முன்னேற்றம் ஏற்படவில்லை. ஓட்டல் வைத்திருக்கின்ற இடம் வாஸ்துபடி சரியாக இருக்காதோ என்ற சந்தேகத்தில் சிலரை அனுகி ஆலோசனை பெற்று அவர்கள் சொல்படியும் செய்தார். அதன் பிறகு நிலைமையில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டது. விட்டு போன நம்பிக்கை துளிர்விடவே மிக கடுமையாக உழைத்து நிலைமையை சரிசெய்து விடலாம் என்ற சூழல் வந்த போது வேலைகாரர்கள் சரிவர அமையாமல் கஷ்டம் வேறு வடிவத்தில் தாக்கியிருக்கிறது.

மளிகை கடை, காய்கறிகடை மற்ற எந்த கடையாக இருந்தாலும் அடிக்கடி தொழிலாளிகள் மாறினால் பெரிய அளவில் பிரச்சனைகள் வராது. ஓரளவு சமாளித்துவிடலாம். ஆனால் ஓட்டல் தொழிலை பொறுத்த வரை சிறிது காலத்திற்காவது நிரந்தர தொழிலாளிகள் வேண்டும். காரணம் ஒரு நாள் ஒரு சமையல்காரன். மறுநாள் வேறொரு சமையல்காரன் என்றால் சமைக்கும் முறையில் மாறுதல் ஏற்பட்டு சுவையும் தரமும் வாடிக்கையாளர் எதிர்ப்பார்ப்பது போல் இருக்காது.

இன்றைய ஓட்டல்களை பற்றி மிக முக்கியமான விஷயத்தை சொல்லியாக வேண்டும். பல பெரிய ஓட்டல்களில் தமிழ்நாடு முழுவதும் சுவையில் எந்த மாற்றமும் இல்லாமல் செய்கிறார்கள். இது எப்படித்தான் சாத்தியமாகிறதோ

தெரியவில்லை. ஒரு நாள் மட்டும் தான் ஓட்டல் சாப்பாடு என்றால் சமாளித்து விடலாம். பல நாட்கள் தொடர்ந்து சாப்பிடும் போது சலிப்பு தட்டுவது மட்டுமல்ல நாக்கிலுள்ள சுவை நரம்புகளே தற்கொலை செய்து கொள்ளும் அளவிற்கு வந்து விடுகிறது.

அப்படி என்ன தான் ஓட்டல் சாதத்தில் கலப்பார்களோ தெரியவில்லை. வெள்ளை வெளேரென்று ஊசி மாதிரி சாதம் விரைத்து கொண்டு நிற்கிறது. இரண்டு பிடி வாயில் வைத்தாலே வயிறு நிரம்பியது போல் உப்பி விடுகிறது. எழுந்து கை கழுவதற்குள் மீண்டும் பசிக்கிறது. இந்த சாதத்தையே மாத கணக்கில் தொடர்ந்து சாப்பிட்டால் வயிற்றில் அல்சர் மட்டுமல்ல குடல் புற்று நோயே வந்தாலும் வந்துவிடும். அந்தளவிற்கு மோசமாக உள்ளது

பெரிய ஓட்டல்களின் நிலைமை இப்படியென்றால் சிறிய ஓட்டல்களை பற்றி கேட்க வேண்டாம். எத்தனை முறையோ அடுப்பில் ஏற்றி இறக்கிய எண்ணெயில் தான் சமையலே செய்கிறார்கள். பொரியல் என்ற பெயரில் வைக்கும் முட்டைகோஸ், உருளைகிழங்கு போன்றவைகளில் அழுகிய நாற்றம் பச்சையாகவே வீசுகிறது. இது தமிழ் நாடு முழுவதும் இருக்கின்ற ஓட்டல்களின் சாபக்கேடு. மற்ற மாநிலங்களை பற்றி அவ்வளவாக எனக்கு தெரியாது. ஏறக்குறைய இப்படியே தான் இருக்கும் என்று நினைக்கிறேன்.

ஆனால் ஓரளவேனும் நிரந்தர தொழிலாளிகள் அமைந்து விட்டால் பொருட்களின் சுவையை சற்றேனும் நிலை நிறுத்தலாம் என்று ஓட்டல் தொழிலில் அனுபவம் உள்ளவர்கள் கருதுகிறார்கள். வீடுகளில் விளம்பரம் இல்லாமல் நடைபெற்று கொண்டு இருக்கின்ற மெஸ்கள் ஓரளவு சுவையுடையதாக இருப்பதற்கு காரணமும் இது தான்.

நமது நண்பரும் தொழிலாளர்கள் சரிவர அமையாத பல இடர்பாடுகள் உருவானவுடன் மீண்டும் கலங்கி போய்விட்டார். ஆனாலும் தொழில் மீது அவர் கொண்டுள்ள வெறி அடங்கவே இல்லை. வெற்றி பெறும் வரை போராடுவது என முடிவு செய்துவிட்டார். ஒரு வேளைக்கு குறிப்பிட்ட தொழிலாளி வராத போது அதை தானே செய்ய துவங்கினார். அப்படியும் சிரமம் ஏற்பட்ட போது ஊரிலிருந்து குடும்பத்தினரை வரவழைத்து வேலையை செய்ய சொன்னார்.

சமையல் வேலையிலிருந்து சப்ளையர் வேலை வரை அவர்களே செய்தனர். இந்த நிலையில் தான் வியாபாரத்திற்கு நிறைய வாடிக்கையாளர்களை வரவழைக்கும் வசிய அஞ்ஞனத்ததை கேள்விப்பட்டு இருக்கிறார். அது சம்பந்தமாக என்னிடம் பேசவும் செய்தார்.


அவரை நேரில் வரச்சொல்லி என்னிடம் இருந்த அந்த அஞ்ஞனத்ததை கொடுத்து அனுப்பினேன். சந்தோஷத்தோடு வாங்கி சென்ற அவர் ஐந்து மாதம் கழித்து அதை விட பன்மடங்கு சந்தோஷத்தோடு வந்தார். ஆரம்பித்த போது

வியாபாரம் எப்படி சுறுசுறுப்பாக நடந்ததோ அதே போல இப்போது நடக்க ஆரம்பித்து விட்டது. மேலும் அடிக்கடி ஓடிப்போன வேலைக்காரர்கள் இப்போது அப்படி செய்வதில்லை. அப்படியே வேலை வேண்டாம் என போவதாக இருந்தாலும் குறைந்தபட்சம் பத்து நாளுக்கு முன்பு சொல்லி விடுவதினால் சமாளித்து கொள்ள முடிகிறது என்று சொன்னார். எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது. நமது முன்னோர்கள் கடைபிடித்த பல விஷயங்கள் இன்றைய வாழ்க்கையில் கூட நல்ல பலனை தருகிறதே என்பதை எண்ணி பார்க்கும் போது அவர்களின் திறமையை வியக்காமல் இருக்க முடியவில்லை.

இந்த தொழில் வசிய அஞ்ஞனத்தில் வாடிக்கையாளர்களை மட்டும் வசிகரம் செய்யலாம் என்பது அல்ல. வியாபாரத்தில் ஏற்படும் சின்ன சின்ன இடஞ்சல்கள், திருட்டுகள் போன்றவற்றையும் நீக்கி கொள்ளலாம். அதே நேரம் யாரிடமும் நாம் ஏமாந்து போகாமல் ஏமாற்றுகாரர்களை பார்த்தவுடன் அடையாளம் கண்டுகொள்ளும், விழிப்புணர்வையும் பங்கு சந்தையில் ஏற்படும் எதிர்பாராத இழப்புகளையும் நாம் உணர்ந்து தப்பி கொள்ள இந்த அஞ்ஞனம் உதவி செய்கிறது.

இதை செய்வதற்கு பல அரிதான மூலிகைகள் தேடி கண்டுபிடிக்க வேண்டும் என்பதினால் செலவு சற்று அதிகமே தவிர மற்றப்படி பலன் என்னவோ சர்வ நிச்சயமானது. இந்த அஞ்ஞனம் செய்யும் முறையை திருவநனந்தபுரம் நாராயண பணிக்கரிடம் நான் கற்றுக் கொண்டேன். அவருடைய கட்டளைப்படி செய்யும் முறையை பகிரங்கமாக எழுத கூடாது என்பதினால் தேவைப்படுபவர்கள் நேரடியாக தொடர்பு கொண்டு கேட்டால் சொல்லித்தர கடமைப்பட்டுள்ளேன்.

## 4 - கடலை தாண்ட வைக்கும் மூலிகை



அயல்நாடுகளை பார்க்க வேண்டும் என்ற ஆவல் மனிதராக பிறந்த அனைவருக்கும் உண்டு. எல்லாதரப்பு மக்களிடமும் இத்தகைய ஆவல் பொதுவாக இருப்பதற்கு மிக முக்கிய காரணம் உண்டு. தெரியாததை தெரிந்து கொள்ள வேண்டும் புதுமையான அனுபவங்களை எதிர் கொள்ள வேண்டும் என்ற எண்ணம் குழந்தை பருவம் முதலே மனிதனுக்கு இயற்கையாக அமைந்து இருக்கிறது.

இந்த எண்ணம் தான் மனிதனை கடலை கடக்க செய்தது. காற்றில் ஏறி விண்ணை சாடசெய்தது. மிக பழைய காலத்தில் அயல்நாட்டு பயணன் என்பது மிக முக்கியமான மூன்று அம்சங்களை கொண்டு இருந்தது.

முதலாவதாக பல்துறை அறிவு விஷயங்களை தேடி பெறுவதற்கும் இரண்டாவதாக அந்நிய பொருட்களை உள்நாட்டில் இறக்குமதி செய்வதற்கும், உள்நாட்டு பொருட்களை ஏற்றுமதி செய்வதற்கும் மூன்றாவதாக ராணுவ நடவடிக்கைகளுக்கும் இருந்தது.

நாள் செல்ல செல்லதான் அயல்நாட்டிற்கு சென்று பணியாற்றுகின்ற வழக்கம் வந்தது. நமது தமிழர்களை பொறுத்தவரை தூரதேச பயணம் என்பது ஆண்டாண்டு காலமாக ரத்ததில் ஊறிய விஷயமாகும். நகரத்தார் என்று அழைக்கப்படும் புகழ்பெற்ற தமிழ் மரபினர் வெளிநாடு சென்று தாய் தமிழகத்திற்கு கொண்டு வந்த பொக்கிஷங்கள் எண்ணற்றவைகளாகும்.

கொண்டு வந்தது மட்டுமல்ல நம்மூர் கலாச்சார சிறப்பை பல நாடுகளிலும் பரப்பினார்கள் என்று சொல்லவேண்டும். பர்மா,இந்தோனேசியா,மலயா மற்றும் சிங்கப்பூரில் தமிழ் பண்பாடு ஒளிமையமாக திகழ்கிறது என்றால் அதற்கு முக்கிய காரணம் நகரத்தார்களே ஆகும்.

நகரத்தார்களை பார்த்தே மற்ற இன மக்களும் அயல்நாட்டு பயணத்தால் தங்களது பொருளாதார பலத்தை அதிகரித்துக் கொள்ள வெளிநாடு செல்ல விருபினார்கள். இந்தியா சுகந்திரம் அடைவதற்கு முன் தமிழகத்தில் வடபகுதி மக்கள் பர்மா நாட்டில் பெருவாரியான தொழில்களை செய்தனர். அதே போலவே தென்தமிழக மக்களின் பெருவாரியான தொழிலாளிகளும், வியாபாரிகளும் இலங்கை நாட்டை நாடி சென்றனர்.

கொழும்பு நகரில் தமிழக வியாபாரிகளின் செல்வாக்கு இன்றும் அதிகமாக இருப்பதற்கு இதுவே மூலகாரணமாகும். ஆனால் இன்றைய தமிழ் மக்கள் பர்மாவையும் இலங்கையையும் விரும்புவதை விட்டுவிட்டனர். சில காலங்களுக்கு முன்பு வளைகுடா நாடுகளின் மீது இருந்த ஆர்வம் கூட குறைந்துவிட்டது.

அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளில் தொழில் மற்றும் வேலை செய்யவே பல தமிழர்கள் விரும்புகிறார்கள். நன்றாக படித்து ஒரளவு விவரம் தெரிந்தவர்களாக இருக்கும் சில தமிழர்கள் அமெரிக்கா சென்று 5,00,000 சம்பளம் வாங்குவதை விட ஆவடியில் இருந்து 50,000 சம்பளம் வாங்குவது மேல் என்கிறார்கள்.

அவர்கள் அப்படி நினைப்பதற்கு காரணம் இல்லாமல் இல்லை ஐரோப்பிய நாடுகளில் தங்குவதற்கு இடம் கிடைப்பது மிக பெரிய சிரமம் அப்படியே

கிடைத்தாலும் வாடகை மிக அதிகம். பல இடங்களில் இந்திய உணவு விடுதிகள் இருந்தாலும் உணவு பண்டங்களின் விலை சராசரியான மனிதன் சமாளிக்க கூடிய விதத்தில் கிடையாது.

பலவேலைகள் ஒப்பந்தத்தின் அடிப்படையில் தான் என்றாலும் ஐரோப்பிய நிறுவனங்களுக்கு நம்மவர்களின் பணி திருப்தியளிக்கவில்லை என்றால் உடனடியாக வேலையை விட்டு அனுப்பிவிடுவார்கள். அதாவது வேலைக்கு முழு பாதுகாப்பு கிடையாது. இவைகளை எல்லாம் தாண்டி மணைவி மக்களை அழைத்து செல்லவேண்டும் என்றால் எதிர்கொள்ளும் சிரமங்களை வார்த்தைகளால் சொல்லிவிட முடியாது. குடிக்கிற தண்ணிலிருந்து பின்பற்றுகின்ற கலாச்சாரம் வரையிலும் பிரச்சனை பிரச்சனை பிரச்சனையை தவிர ஒன்றுமே இல்லை.

இந்த மாதிரி பிரச்சனைகளை எதிர்கொள்ள முடியாமல் அல்லது எதிர்கொண்டு மனம் சலித்து அயல்நாடே வேண்டாம் சாமி சொந்த நாடே சொர்க்கம் என்று சொன்னாலும் வளைகுடா நாடுகளில் வேலை செய்யும் நபர்கள் அங்கே அனுபவிக்கும் கஷ்டங்களை கதைகதையாய் விவரித்தாலும் அயல்நாட்டுக்கு செல்ல வேண்டும் என்ற மோகம் இன்னும் பலரை விட்டபாடு இல்லை.

அதற்கு உண்மையான காரணம் என்ன? ஊர் சுற்றி பார்க்க வேண்டும் என்ற ஆசையா? பல நாட்டு அறிவை தமதாக்கி கொள்ளவேண்டும் என்ற ஆவலா? இரண்டும் நிச்சயம் இல்லை. திரைகடல் ஒடியும் திரவியம் தேட வேண்டும் என்ற எண்ணம் தான் பலரை உந்தி தள்ளுகிறது.

வெளிநாடு செல்ல ஆசைபடுவதற்கு வேறு பல காரணங்களும் இருக்கிறது. நமது ஜனங்களுக்கு சாதாரண குண்டு ஊசி என்றாலும் கூட அது வெளிநாட்டு பொருள் என்றால் அதன்மீது தனி கவர்ச்சி தான். எனது தகப்பனார் ஐம்பது வருடங்களுக்கு முன்பு கொழும்பு கடைவீதியில் விற்ற அமெரிக்க தயாரிப்பான ஒரு சிறு விளையாட்டு பொருட்களை வாங்கி வந்து இருக்கிறார். அதை இன்று கூட எனது தாயார் மிக நேர்த்தியாக பாதுகாத்து வருகிறார்.

அதற்கு என் அப்பா வாங்கி வந்தார் என்பது மட்டுமல்ல, அது மட்டும் தான் காரணம் என்றால் அவர் வாங்கி வந்த மற்ற பொருட்களையும் அதே போல் பாதுகாக்க வேண்டுமெல்லவா? ஆனால் அவைகள் போன இடமே தெரியவில்லை. இது மட்டும் இன்று வரை இருப்பதற்கு U.S.A என்ற எழுத்து இருப்பது தான் வயது வித்தியாசமின்றி தமிழ்நாட்டு மக்கள் அனைவரிடத்திலும் இப்பழக்கம் சகஜமாக இருக்கிறது.

பொருட்களுக்கும் மட்டும்தான் மோகம் என்றில்லை அயல்நாட்டு படிப்புக்கு கூட அலாதியான மரியாதை இருக்கிறது. திருநெல்வேலியில் இருக்கும் நண்பர் ஒருவரின் மகளுக்கு டாக்டர் மாப்பிள்ளை வந்தது. பையன் படித்து தனியாக மருத்துவமனை நிறுவி கை நிறைய சம்பாதிக்கிறான். ஆனால்

எனது நண்பர் M.S படித்த அந்த மாப்பிள்ளைக்கு பெண் கொடுக்காமல் வெறும் M.B.B.S படித்த பையனுக்கு பெண் கொடுத்தார்.

எனக்கு ஆச்சரியமாக போய் விட்டது. ஏன் M.S படித்த பையனின் குணமோ குடும்பமோ சரியில்லையா? என்று அவரிடம் கேட்டேன். அப்படி எல்லாம் ஒன்றுமில்லை இந்த பையன் M.B.B.S சை ரஷ்யாவில் படித்து இருக்கிறான் என்று பெருமையாக சொன்னார். நான் அவரிடம் எதுவும் பேசவில்லை. ரஷ்யாவின் கல்வி தரம் இந்தியாவின் தரத்தை விட மேம்பட்டது அல்ல என்று எடுத்து சொன்னாலும் அவர் கேட்க போவதில்லை. நம்மை தான் பைத்தியகாரன் என்பார் .

இவர் மட்டுமல்ல இவரை போல ஏராளமான மனிதர்கள் வெளிநாட்டு படிப்பை சந்திரனனிலிருந்து எடுத்து வந்த கல்லை போல அபுர்வமாகவும், ஆச்சர்யமாகவும் பார்க்கிறார்கள். மூலகடையில் விற்கும் எட்டணா முறுக்கு கூட அமெரிக்காவில் இருந்து வந்தது என்று சொன்னால் பத்து நிமிடத்தில் விற்று தீர்ந்து விடும். அந்தளவிற்கு அயல்நாட்டு மோகம் நமது ஜனங்களை பிடித்து ஆட்டுகிறது.

அம்மனமாய் அலையும் ஊரில் வேட்டி கட்டியவன் மடையன் என்று ஒரு பழமொழி சொல்வார்கள். அதே போலத்தான் வெளிநாடு சென்று மான் பிடிப்பதை விட உள் நாட்டில் முயல் பிடிப்பது மேல் என்று மக்களிடம் சொன்னால் மனநோய் இருப்பதாக அவர்கள் பேசிக் கொண்டாலும் ஆச்சரிய படுவதற்கு இல்லை

என்னிடம் ஜோதிடம் சம்பந்தமாக கேள்வி கேட்க்கும் பல பெற்றொர்கள் தங்கள் பிள்ளைக்கு திருமணமாகுமா? குழந்தை பிறக்குமா? சொத்து சுகம் வாங்க முடியுமா? என்று கேட்பது கூடவே பையன் வெளிநாட்டுக்கு போவானா? என்பதை கேட்பதற்கு மறப்பதேயில்லை.

ஆமாம் கண்டிப்பாக செல்வான் என்று நாம் சொல்லி விட்டால் அவர்கள் முகத்தில் தெரியும் பாருங்கள் ஒரு ஆனந்தம் பிரகாசம் அதன் அழகே அழகு, இந்த இடத்தில் நான் சொல்லப் போகும் விஷயம் தேவையற்றது என்றாலும் சொன்னால் நன்றாகயிருக்கும் என்று நினைக்கிறேன். பையன் வெளிநாட்டுக்கு போவானா என்று கேட்க்கும் எவரும் என் மகளுக்கு வெளிநாட்டு யோகம் உண்டா என்றோ மகன் வெளிநாட்டு பெண்ணை திருமணம் செய்வானா என்றோ கேட்பதே இல்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியாவிட்டாலும் உங்களுக்கு புரியும் என்று நினைக்கிறேன்.

நிறைய இளைஞர்கள் வெளிநாடு செல்ல விரும்புவது பணம் சம்பாதிக்கத்தான் என்றாலும் அவர்களது விருப்பம் தவறு என்று நம்மால் சொல்ல முடியாது. ராமாவரம் ஏரிக்குள் பழைய இரும்பு கடை வைத்திருப்பவன் கூட பெண் தேட ஆரம்பித்து விட்டால் ஐம்பது சவரன் போட முடியுமா? என்று கேட்கிறான். இன்று அத்தியாவசிய பொருளாகிவிட்ட சாதாரண கிரைண்டர், மிக்ஸி கூட

ஆயிரக்கணக்கான ரூபாய் கொடுத்தால் தான் வாங்க முடிகிறது. ஒட்டு குடித்தனம் நடத்தும் ஒரு சிறிய வீட்டிற்கு வாடகை இரண்டாயிரம் ரூபாயிலிருந்து தான் ஆரம்பிக்கிறது. மளிகை பொருள், காய்கறி இவற்றின் விலை தினசரி ஏறுகிறது.

இந்த நிலையில் சராசரி மனிதனுக்கு பணம் என்பது தவிர்க்கவே முடியாத தேவையாகிவிட்டது. எப்படியாவது எந்த வகையிலாவது சம்பாதிக்க வேண்டும் என்று நினைக்கிறார்கள். திருட வேண்டும், ஏமாற்ற வேண்டும், சட்டத்தை மீற வேண்டும் என்று நினைக்காமல் வெளி நாடு சென்றாவது சம்பாதிக்க வேண்டும் என்று நினைப்பதில் தவறுகள் இருப்பதாக நான் நினைக்கவில்லை.

அயல் நாடுகளில் சென்ற சம்பாதிப்பதில் ஒரு நல்ல அம்சமும் இருக்கிறது. வெளிநாடு சென்று வந்த ஒருவர் ஐந்து வருடமோ, பத்து வருடமோ சிரமமாக இருந்தாலும் அதை தாங்கி கொண்டு நாலு காசு சம்பாதித்து தாய் நாட்டிற்கு வந்தால் எதாவது ஒரு சுய தொழிலை செய்யலாம் அல்லது இருப்பதை வைத்து செட்டும் சிக்கனமாக குடும்பத்தை நடத்தி போய் விடலாம். என்றார்.

அவர் கூற்று சரியானதது தான். சோம்பேறித்தனமாக சேமிப்பை செலவழித்துக் கொண்டு இருக்காமல் சுயத் தொழில் தொடங்கி நடத்தலாம் என்பது வரவேற்க தக்க விஷயம் தான். ஆனால் இது எத்தனை பேரால் முடிகிறது. சம்பாதித்த பணமெல்லாம் பிள்ளைகளின் திருமணத்திற்கும் படிப்பிற்கும் செலவழித்துவிட்டு வெறுங்கையாய் இருப்பவர்கள் எத்தனையோ பேரை நாம் பார்த்திருக்கிறோம். ஆனாலும் ஒரு ஆறுதல் அவைகளையாவது அவர்களால் செய்ய முடிகிறதே என்பது தான்.

என்னிடம் ஒரு நண்பர் கேட்டார். அந்த காலத்தில் நகரத்தார்கள் மிக சுலபமாக அயல்நாடுகளுக்கு சென்று வியாபாரம் செய்து வந்து இருக்கிறார்கள். அத்தகைய வியாபாரத்தில் ஈடுபட்டு நஷ்டம் அடைந்தவர்கள் மிக குறைவு. சுலபமாக வெளிநாடு செல்லவும் அங்கு சம்பாதிக்கவும் தங்களது மூளை உழைப்பை தவிர வேறு எதையாவது அவர்கள் பயன்படுத்தினார்களா?

நண்பரின் இந்த கேள்விக்கு தெளிவான பதில் சொல்ல அப்போது என்னிடம் எந்த விவரங்களும் கிடையாது. ஆனாலும் அந்தகேள்வி என் மனதிற்குள் ஒரு பகுதியில் விடை தெரிவதற்காக பதுங்கியிருந்தது. ஒரு சமயம் திருவண்ணாமலையில் இருந்து என்னை காண வந்த ஒரு சாது அந்த கால செட்டிமார்கள் அயல் நாட்டு பிராயாணம் வெற்றிகரமாக அமைய அபூர்வ மூலிகைகளால் ஆன அஞ்சனங்களை பயன்படுத்தினார்கள் என்ற ஒரு தகவலை தந்தார். ஆனால் அவருக்கு அதைப்பற்றி மேலதிக விவரங்கள் தெரியவில்லை. அப்படியொரு குறிப்புகள் நிச்சயம் பழங்கால சுவடிகளில் இருக்குமென்று சில காலம் தேடிப்பார்த்தேன். எந்த விவரங்களும் கிடைக்கவில்லை.

சில அபூர்வமான மூலிகைகளை ஒரு வனவாசி பெரியவர் என்னிடம் கொண்டு தருவார். காட்டில் சிரமப்பட்டு தேடியெடுக்க வேண்டிய பொருள் என்பதினால் அவைகளுக்கு அவர் அதிகப்படியான பணத்தை எதிர்ப்பார்ப்பார். ஆனால் அவரிடம் இருந்து பெறுகிற பொருள் மிக சுத்தமானதாக இருக்கும். அவர் ஒரு முறை பேச்சுவாக்கில் என்னிடம் கடல் தாண்டும் மூலிகை இருக்கிறது வேண்டுமா? என்று கேட்டார்.

நான் விவரம் தெரியாமல் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் இது தெரியாதா சாமி? அந்த காலத்தில் செட்டியாருங்க இந்த மூலிகையால் செய்த அஞ்சனத்தை தங்களோடு எடுத்து போவார்கள். இது கையில் இருந்தால் அயல் நாட்டு தொழிலில் சிக்கல் வராது. அபாயமும் கிட்டே நெருங்காது. கையில் காசும் சேரும் அயல் நாட்டில் செய்யும் தொழில்களில் ஏற்படும் சிக்கல்களும் தீரும் என்று சொன்னதோடு இல்லாமல் இன்று வெளிநாட்டிற்கு செல்ல வேண்டும் என்று விரும்பி செல்ல முடியாமல் இருப்பவர்களும் இதை பயன்படுத்தலாம் என்ற தகவலையும் தந்தார்.

எனக்கு தெரியாத விஷயத்தை தெரியாது என்று ஒத்து கொள்வதில் நான் எப்போதுமே தயங்கியது கிடையாது. அதனால் அவரிடம் அந்த மூலிகையை வெறுமனே வாங்கி வைத்து நான் என்ன செய்ய போகிறேன், அதை வைத்து எனக்கு அஞ்சனம் செய்ய வழி தெரியாதே என்று கேட்டேன். அவர் எனக்கும் தெரியாது. ஆனால் ஒரு பெரியவர் இருக்கிறார். அவருக்கு பணம்கொடுத்தால் நிச்சயம் சொல்லித் தருவார். வேண்டுமானால் அவரை கூட்டி வரட்டுமா? என்றார் அந்த பெரியவரை வரச்சொல்லி அந்த அஞ்சனம் செய்யும் முறையை கற்றுக் கொண்டேன்.

அதை இந்த பதிவின் மூலம் நாலு பேருக்கு தெரிய செய்தால் பலருக்கு உதவியாக இருக்குமே என்பதற்காக பகீரங்கமாக எழுத விரும்புகிறேன். சாதாரணமாக நாட்டு மருந்து கடைகளில் கிடைக்கும் வலம்புரி காய், இடம்புரிகாய், தான்றிகாய், கடுக்காய், ஆகாய தாமரை, வெட்டி வேர், சாரனை வேர், அகில் கட்டை, சந்தன கட்டை, தேவதாறு கட்டை போன்றவைகளை வாங்கி கற்பூரத்தில் வைத்து எரித்து சாம்பலாக்க வேண்டும்.

அந்த சாம்பலை பயிறுகள் திரிக்கும் கல் எந்திரத்தில் போட்டு நன்றாக அரைக்க வேண்டும். பின்னர் பட்டுப் போல் சலித்து சுத்தமான நல்லெண்ணையில் பிசைந்து சிறிய உருண்டைகளாக்கி காலை வெய்யிலில் உலர்த்த வேண்டும். அப்படி உலர்த்திய பிறகு அந்த உருண்டைகளை மீண்டும் கற்பூரத்தில் எரித்து சாம்பலாக்கி வெண்கல கிண்ணத்தில் சேமித்து கொள்ள வேண்டும்.

அந்த வெண்கல கிண்ணத்தை பூஜையறையில் விநாயகருக்கு முன்பு வைத்து ஓம் கங் கணபதியே நமஹ என்ற மூல மந்திரத்தை காலை வேளையில் 1008 முறை ஜெபிக்க வேண்டும். இப்படி தொடர்ச்சியாக 45 நாள் ஜெபித்து


மந்திரத்தை உரு ஏற்ற வேண்டும். இந்த மந்திர உருவேற்று நடக்கும் நாளில் கண்டிப்பாக மாமிச போஜனம் கூடாது. பிரம்மசரியத்தை வலுவாக கடைபிடிக்க வேண்டும். இந்த விஷயத்தில் நீக்கு போக்காக நடந்து கொண்டால் நிச்சயம் பலன் இருக்காது. மேலும் ஜனன மரண தீட்டுக்களை தவிர்க்க வேண்டும். நாப்பத்தைந்து நாள் உருவேற்றிய பிறகு வெண்கல கிண்ணத்தில் இருக்கும் மூலிகை சாம்பலை சுத்தமான பசு நெய், சந்தன எண்ணெய் முதலியவற்றில் கலந்து மை போல அரைக்க வேண்டும். அப்படி அரைக்கும் போது ஓம் யங் சங் கீலிம் கும்பட் ஸ்வாஹ என்ற மந்திரத்தை சொல்லிக் கொண்டே அரைக்க வேண்டும்.

அப்படி அரைத்த முடித்த பிறகு சாம்பலை வழித்து எடுத்து வெண்கல கிண்ணத்தில் வைத்துக் கொண்டு பூத வேதாள உப்பு, கன எருமை விருச்ச பால், மதிமயக்கிவேர் போன்றவற்றை கலந்து ஒரு வெண்கல தட்டு எடுத்து கிண்ணத்தை காற்று புகாமல் மூடி வாழை மரத்து அடியில் புதைத்து விட வேண்டும். 45 நாள் அது புதைக்கப்பட வேண்டும். அந்த நாளில் வாழை மரத்திற்கு கொடுக்கும் தண்ணீரில் சற்று மஞ்சள் கலக்க வேண்டும்.

45 நாட்களுக்கு பிறகு அதை வெளியில் எடுத்து குரு மூலமாக பெற்ற மூல மந்திரத்தை 25நாட்கள் ஒருமுகப்பட்ட மனத்துடன் உருயேற்றி மீண்டும் பசும்நெய் விட்டு குப்பியில் அடைத்து வைத்து கொள்ள வேண்டும். இது நம் கையில் இருந்தாலே தொழில் ரீதியான அயல்நாட்டு பயணம் நம்மை தேடி வரும். தடங்கல் இருந்தால் தானாக விலகும் இது மட்டும் அல்ல அயல்நாடு செல்லாமல் உள்ளூரில் தொழில் நடத்துபவர்கள் கூட இந்த அஞ்சனத்தை பயன் படுத்தி நிறைய செல்வ வளத்தை பெறலாம்

இந்த விஷயத்தை நம்புவது சற்று கடினமாகத்தான் இருக்கும். இப்படியெல்லாம் கூட நடக்குமா? இது சாத்தியமா? என்று தோன்றும். இந்த சந்தேகங்கள் ஆரம்பத்தில் எனக்கும் இருந்தது. ஆனால் இதை சில பேருக்கு செய்து கொடுத்த பிறகு அவர்கள் வாழ்வில் ஏற்பட்ட மாறுதல்கள் எனக்கே ஆச்சரியமாக இருந்தது. நமது முன்னோர்கள் இப்படி பல விஷயங்களை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவைகளை உண்மையன்று நிருபிபதற்கு அனுபவங்களை தவிர வேறு ஆதாரங்கள் இல்லை.

## 5 - இல்லற வாழ்வைத் தரும் இனிய மூலிகை



கல்யாணம் கட்டினாலும் கட்டினேன் என் சந்தோஷம் எல்லாம் கற்பூரம் போல கரைந்து போய்விட்டது. என் அப்பா கண்ணில் சிறு தூசி கூட விழ அனுமதிக்க மாட்டார். ஒரு கஷ்டம் எனக்கென்றால் பதறி போய் விடுவார். ஜல தோசம் ஜுரம் என்றால் கூட ராத்திரி முழவதும் உறங்காமல் அருகிலேயே உட்கார்ந்து நெற்றியை தொட்டு தொட்டு பார்ப்பார். என் உள்ளங்காலில் சூடு பறக்க தேய்த்து விடுவார்.

என் அம்மாவை பற்றி கேட்கவே வேண்டாம். வளர்ந்து பெரியவளாகி விட்டாலும் சாதம் பிசைந்து ஊட்டிவிடுவார். வீட்டில் தண்ணி இல்லையென்றால் நடந்து சென்று நான் குளிக்க குடம் குடமாய் தண்ணீர் கொண்டு வருவாள். வேளைக்கு ஒரு தாவணி கட்டி கை நிறைய வளையல் போட்டு நான் நடந்து செல்லும் அழகை மீண்டும் மீண்டும் பார்த்து ரசிப்பாள்.

ஒன்ணாங்கிளாஸ் முதல் கூடவே படித்த சாந்தி இருக்கிறாளே தினம் என்னை பார்க்கவில்லை என்றால் உயிரையே விட்டுவிடுவாள். அவளும் நானும் ஆடிய ஆட்டம் கொஞ்சமா என்ன? தங்கராசு தோட்டத்தில் மாங்காய் திருடி வேலிதாண்டி ஒடியதை சொல்லவா? அய்யானார் குதிரை மேல் ஏறி புளியங்காயை காக்கா கடி கடித்ததை சொல்லவா? என்னை முதல் முறையாக கண்ணடித்த பையனை நானும் அவளும் சேர்ந்து ஓட ஓட விரட்டியதை சொல்லவா? இப்படி எத்தனையோ சந்தோஷங்களை பட்டியலிட்டு கொண்டே போகலாம்.

ஆனால் இன்று மாமனாருக்கு வெந்நீர் போட்டு கொடுத்து முதுகு வலிக்கிறது. புருஷன் துணிகளோடு அவன் அம்மா அப்பா துணிகளையும் சேர்த்து துவைக்க வேண்டும். சத்திரம் மாதிரி கட்டிய வீட்டை அடுப்பங்கரையிலிருந்து வெளிவாசல் வரை தினம் மூன்று வேளை பெருக்கி துடைக்க வேண்டும்.

மலை போல் குவிந்து கிடக்கும் பாத்திரங்களை தேய்த்து கழவி ஒழங்குப்படுத்த வேண்டும். இத்தைனையும் செய்தாலும் அத்தனையிலும் குறை கானும் மாமியார்

வாரத்திற்கு இருமுறை தாய் தகப்பனுக்கு போன் செய்யாமல் இருக்க முடியாதோ? உன் அம்மா எதற்கும் உதவாதவளவாக உன்னை வளர்த்து விட்டுயிருக்கிறாளே என்று நாக பாம்பாய் நாலு முறை சீறி விழகிறாள்.

கட்டியவனிடம் குறைகளை கொட்டித்தீர்கலாம் என்றால் என் அம்மா சொல் கேட்டு நடப்பதாக இருந்தால் வீட்டில் இரு முடியவில்லையென்றால் அப்பன் வீட்டுக்கு போ என்கிறான்.

அத்தோடு நிற்பானா? மாடு மாதிரி வளர்ந்து இருக்கிறாயே தவிர மண்டையில் மூளையே கிடையாது. ஊரில் அவனவன் பெண்டாட்டி எத்தனை நகையும் பணத்தோடு வருகிறாள் உன்னை கட்டிக் கொண்டு தலை தீபாவளிக்கு ஒரு மோதிரத்தை கூட பார்க்கவில்லை. சீர் செய்ய வக்கில்லாத உன் தகப்பன் உன்னை எதற்காக பெற்றான் என்று நெருப்பாய் பொழிகிறான்.

இப்படி பல பெண்கள் காலகாலமாக எதற்கடா கல்யானம் செய்தோம் என்று புலம்பி கொண்டு திரிந்தாலும்.

திருமணத்தன்று வளர்த்த நெருப்பில் என் சந்தோஷம் எல்லாம் பொசுங்கி விட்டது. உன் தங்கையோடு சிரித்து பேசாதே, உன் தமையனோடு சகஜமாக பழகாதே, நல்லவர்கள் போல் பேசி நடித்து உன்னிடம் இருப்பதை எல்லாம் பிடுங்கி வடுவார்கள்.

உன் அம்மாவின் முகமே சரியில்லை எப்போது நீ ஏமாறுவாய் என்று பார்த்து கொண்டே இருக்கிறார்கள். நடுத் தெருவில் உன்னை விட்டுவிடுவார்கள் என்று தாலி கட்டிய நாள் முதலாய் வார்த்தைகளால் இடிக்கிறாள்.

அது என்ன அந்த சங்கரனுக்கு வேறு வேலையே இல்லையா எப்ப பார் உன் பின்னாலையே சுற்றுகிறான் அவன் தொடர்பை என்று நீ விடுகிறாயொ அன்றுதான் உருப்படுவாய் என்று பால்யகால சிநேகிதனை வெட்டிவிட சொல்கிறாள்.

பவானி ஜவுளிகடையில் புதுப்பது ரக சேலைகள் வந்துயிருக்கிறதாம். காலம் முழக்க உங்களை கட்டிக்கொண்டு அழவதை விட ஒரு நாலு சேலையாவது எடுத்து தாருங்கள் அதை கட்டிக் கொண்டு அழகிறேன்

இவ்வளவு அழகான கழத்தில் இரண்டே இரண்டு செயின்களை போட்டு நடமாடவே வெட்கமாக இருக்கிறது. பச்சை கல் பதித்த ஒரு நெக்லஸ் வட்டிக்கு பணம் வாங்கியாவது போட்டே ஆக வேண்டும். உடனடியாக ஏற்பாடு செய்யுங்கள் என்று அனுதினமும் வயிற்றில் புளியை கரைக்கிறாள்.

நிம்மதியாக உட்கார்ந்து பேப்பர் படிக்கவில்லை, நண்பர்களோடு காற்றாட நடந்து போக முடியவில்லை, அவ்வளவு ஏன் என் சுயவிருப்படி ஒரு சட்டை

கூட போட முடியவில்லை அவளுக்கு கட்டிய தாலியோடு என் சுகந்தரத்தையும் சேர்ந்து கட்டி விட்டேன் என் சிரிப்பு சத்தம் கெட்டிமேள சத்தத்தோடு பெட்டி பாம்பாக அடங்கி விட்டது

என்று பல ஆண்கள் புழங்கி கொண்டிருந்தாலும் யாரும் திருமணத்தை வேண்டாம் என்று வெறுப்பாரில்லை.

பாலைவன கப்பல் என்று அழைக்கப்படும் ஒட்டகத்திற்கு கள்ளிச்செடி மிகவும் பிடித்தமான உணவு கள்ளியில் இருக்கும் முட்கள் நாக்கையும், வாயையும் குத்தி கிழித்து காயப்படுத்தினாலும் ரத்தம் சொட்ட சொட்ட மீண்டும் மீண்டும் கள்ளி செடியை தான் தின்னும்.

சுவை உணரச்சிக்கே அடிமையாகி போன ஒட்டகம் போல் மனிதர்கள் திருமணத்தால் கஷ்டம் என்று தெரிந்தாலும் அந்த பந்தபாச சூழலுக்குள்ளேயே தங்களை தாங்களே அழுத்தி கொள்வதற்கு என்ன காரணம்?

நிறைய பேரிடம் அதாவது இன்னும் தனக்கு திருமணம் நடக்கவில்லையே என்று கவலைப்படும் ஆண் பெண்களிடம் கல்யானம் என்பது அத்தியாவசிய தேவைதானா அது இல்லாமல் வாழ முடியாதா என்று கேட்டுருக்கிறேன்.

அதற்கு அவர்கள் உடம்பில் தெம்பு இருக்கின்ற வரை வாழ்கை துணையின் அவசியம் தெரியாது. சற்று வயாதாகி விட்டால் எவ்வளவு தான் சம்பாதித்தாலும் எத்தனை சொத்து பத்துக்கள் இருந்தாலும் உடம்புக்கு ஒன்று என்று படுத்துவிட்டால் கவனிப்பதற்கு நமக்கு என்று ஒரு துணை வேண்டும்.

நமது ஆயுள் முழுவதும் பெற்றோர்கள் கூடவே வரமாட்டார்கள். உடன் பிறப்புகள், நண்பர்கள் இன்னும் எத்தனையோ உறவுகள் இருந்தாலும் அத்தனை பேரும் நம்மை கவனிக்க வேண்டுமென்று எதிர்பார்க்க முடியுமா? அல்லது அது சாத்தியம்தானா?

நல்லதோ கெட்டதோ உனகென்று நான் எனக்கென்று நீ என்று இருப்பது கணவன் மணைவி உறவுதான், பெற்ற பிள்ளைகள் கூட நம்மோடு இருப்பார்கள் என்று உறுதி தர முடியாது. ஆனால் கணவன் மணைவி உறவு என்று வரும் போது பரஸ்பரம் ஒரு கடமை இருக்கிறது, கட்டாயம் இருக்கிறது. அதனால் கல்யாணம் அவசியம் தான் என்கிறார்கள்.

இவர்களின் பேச்சை கூட்டி கழித்து பார்த்தால் திருமண உறவு என்பது அல்பமான உடல் சம்பந்தப்பட்டது அல்ல என்பது நன்றாக புரிகிறது.

எனக்கு ஒரு கஷ்டம் வந்தால் அதை பகிர்ந்து கொள்ள ஒரு உறவு இருக்கிறது என்ற நம்பிக்கை மனிதன் மனதில் உள்ள பயத்தை போக்கி விடுகிறது,

நோயில் படுத்தால் கூட கஞ்சி கொடுக்க ஆள் இருக்கிறது என்று நம்புகிறவன் தான் நோயிலிருந்து மீண்டு வரமுடியும்.

அய்யோ எனக்கு யாருமில்லையே என்ற எண்ணமே நோயின் கொடுமையை பலமடங்கு உயர்த்திவிடும். அதே நேரம் இயற்கையின் சட்டமே ஆணும் பெண்ணும் இணைந்திருப்பதாகதான் அமைத்து இருக்கிறது.

அந்த இயற்கை விதியிலிருந்து மாறுபட்டு வாழ நினைப்பவன் தனது நம்பிக்கையின் ஊன்று கோலை வேறு எதிலாவது வைத்திருக்க வேண்டும். அப்படி வைக்கவில்லையென்றால் வாழ்கையில் பல தடுமாற்றங்கள் வந்துவிடும்.

இல்லறம் வேண்டாம் துறவரம் தான் தேவையென்று ஆன்மிக வாழ்வை மேற்கொண்ட சாதுக்கள் தங்களது பற்றுதலை தெய்வத்தின் மீதோ தேசத்தின் மீதோ வைக்கவில்லையென்றால் நிச்சயம் ஒருநாள் ஓட்டை படகாகி ஆசை என்ற குளத்திற்குள் முழ்கி விடுவார்கள்.

இத்தகைய பலரால் தேகாபிமானத்தை விட முடியாமல் தவிக்கும் போது தான் பொது வாழ்விலும் களக்கம் ஏற்படுகிறது. ஆனால் பிரம்மசரிய வாழ்கை என்பது சவால்மிகுந்ததாக இருந்தாலும் பல சாதனைகளை படைக்க துணை செய்கிறது.

இதுவரை உலகத்தில் சிறந்த மனிதர்கள் என்று கருதப்படும் பலருடைய வாழ்கையை எடுத்து பார்த்தோம் என்றால் ஒன்று அவர்கள் குடும்ப வாழ்கை சோபிதம் இல்லாததாக இருந்திருக்க வேண்டும் அல்லது அவர்கள் குடும்பத்தை கவனிக்காதவர்களாக இருந்திருக்க வேண்டும்.

மகாத்மா காந்தி போன்றவர்கள் திறமசாலியான குடும்ப தலைவர்களாக இருந்திருந்தால் நல்ல குழந்தைகளின் தந்தையாக இருந்திருக்கலாமே தவிர தேசதந்தையாக உயர்திருக்க முடியாது.

எனவே தான் பொது வாழ்விலும் ஆன்மிக வாழ்விலும் ஈடுபடுபவர்களுக்கு குடும்பம் என்பது பெரிய விலங்காகவே இருந்திருக்கிறது.

நமது கலைஞர் கருணாநிதி அவர்களை உதாரணத்திற்கு எடுத்துக் கொண்டால் அவருக்கு இருக்கும் திறமைக்கும் அறிவுக்கும் குடும்பம் என்பது ஒன்று மட்டும் இல்லாது இருந்திருந்தால் கர்மவீரர் காமராஜர், அடல்பிஹாரி வாஜ்பாய் போன்ற தலைவர்களின் அளவிற்கு உயர்ந்தவராக மதிக்கப்பட்டு இருப்பார்.

ஆனால் பாவம் அவரது குடும்பம் அவரை சேற்றில் போட்டு உருட்டி எடுப்பதோடு மட்டுமல்லாமல் பாறையிலும் மோதுகிறது. எப்பேர்பட்ட

தலைவர் என்று வியந்து பார்பதற்கு பதிலாக இப்படியும் தலைவரா? என்று முகம் சுளித்து பார்க்கும் அளவிற்கு போனதற்கு குடும்பம் தான் காரணம் என நமக்கு நன்றாக தெரியும்.

உலக விஷயங்கள் இருகட்டும் மதங்களில் திருமண வாழ்கையை பற்றி என்ன சொல்லப்பட்டுருக்கிறது என்பதை பற்றி சிறிது சிந்தித்தால் நன்றாக இருக்கும் என நினைக்கிறேன்.

இந்துமதம், கிறிஸ்த்துவ மதம் ஆகிய இருபெறும் மதங்களும் மனிதர்கள் குடும்பம் நடத்த கூடாது என்று சொல்லவில்லை என்றாலும் கடவுளை நோக்கிய பயணத்திற்கு இல்லறம் தடையாகவே இருக்கும் துறவறம் தான் சரியாக இருக்குமென்று சொல்கின்றனர். அதுவும் குறிப்பாக மத போதகர்களும், குருமார்களும் நிச்சயம் பிரம்மசரியத்தை கடைபிடிக்க வேண்டுமென்று வலியுறுத்துகின்றன. அதே நேரம் சாதாரன மனிதர்கள் குடும்ப வாழ்விற்கு தடை போடுவது கிடையாது.

ஆனால் கிறிஸ்த்துவ மதத்தில் ஒரு பிரிவினராகிய பிராட்டஸ்செண்டுகள் மத குருமார்களும் இல்லரவாசிகளாக இருக்கலாம் என சொல்கிறார்கள் இதற்கு அவர்கள் சொல்லும் காரணம் மனிதடமுள்ள இயற்கையான காம உணர்வு கடடுபடுத்த கூடியது அல்ல இயற்கைக்கு விரோதமாக அதை தடுக்க நினைத்தால் மனிதனது புத்தி குறுக்கு வழியை தேர்ந்தெடுத்து ஒழுக்கமற்ற நிலைக்கு அழைத்து செல்லும். இதனால் கடவுளை நோக்கிய பயணம் தடைப்பட்டு போகலாம். என்று சொல்கிறது. இஸ்லாமிய மதமும் எறக்குறைய இதே கருத்தை தான் சொல்கிறது. சந்நியாச வாழ்கையில் இருக்கும் சில மனிதர்கள் நடந்து கொள்ளும் விதங்களை பார்த்தால் இது சரியான கருத்து தானோ என்று நமக்கு தோன்றும்.

சாதாரணமாக அறிவை கொண்டு பார்க்கும் போது இந்த கருத்தில் எந்த குற்றமும் கண்டுபிடிக்க முடியாது. ஆனால் நமது அறிவை தீட்சன்யப்படுத்தி பார்க்கும் போது புலனடக்கம் என்பது இல்லையென்றால் கடவுளை அடைவது என்பது சாத்தியம் இல்லாமலேயே போய்விடும் என்பது தெரியும்

இந்துமதத்தில் ஒரு பிரிவான பதஞ்சலி முனிவரின் யோகமார்கம் புலன்களை அடக்குவதற்கு பல வழிவகைகளை சொல்கிறது. அந்த வழியில் நடந்தால் பிரம்மசரியம் என்பது சாத்தியம் இல்லாத விஷயமல்ல இன்று கூட பலர் அந்த வழியில் சென்று ஒழுக்கம் தவறாத உயரிய வாழ்கை நடத்தி கொண்டு இருக்கிறார்கள். யோகாசாரம் என்றால் என்னவென்று தெரியாதவர்களும், தெரிந்து இருந்தாலும் கூட நடைமுறையில் செய்ய தவறியவர்களும் புரிகின்ற குற்றத்தால் பிரம்மசரிய வாழ்கை பலராலும் விமர்சிக்கபடுகிறது.

ஆன்மீக வாழ்கையென்பது சந்நியாசத்தாலும், பிரம்மசரியத்தாலும் தான் நடத்த முடியுமென்ற கருத்தில் உறுதியாக இருக்கும் பௌத்த ஜெயின மதங்கள் சம்சார வாழ்கையானது கடவுளிடம் சேர்காது என்று சொல்வது போல இந்து மதம் சொல்லவில்லை.

புலன்களை அடக்கி ஒரு ஆன்மீக சாதகன் எந்த லட்சியத்தை அடைவானோ அதே லட்சியத்தை சிறிதும் குறையாமல் ஒழக்க நெறியும் கடமை உணர்வும் கொண்ட இல்லறத்தாலும் பெறலாம் என்று சொல்கிறது. குடும்ப வாழ்கையை பற்றி மதங்களிடையே கருத்து வேறுபாடுகள் ஆயிரம் இருந்தாலும் இல்லறத்தான் துறவறத்தான் ஆகலாம். ஆனால் எந்த நிலையிலும் துறவறத்தான் இல்லறத்தானாக மாறவே கூடாது என்று இந்திய மதங்கள் எல்லாம் வலியுருத்துகின்றன.

இந்த கட்டுரையின் நோக்கம் சம்சார வாழ்கை சிறந்ததா, சந்நியாச வாழ்கை சிறந்ததா என்று மத கருத்துகளை ஆராய்வது அல்ல, திருமண வாழ்க்கைக்கு சாதாரண மக்கள் கொடுக்கும் முக்கியத்துவத்தை சமயங்கள் கொடுக்கின்றனவா என்பதை தொட்டு பார்க்கத்தான் மத விவகாரங்களுக்குள் புகுந்தோம். இனி நாம் பேசிக் கொண்டிருந்த சாமான்ய மக்களின் சிந்தனைக்கு வருவோம்.

பொதுவாக கிராமங்களில் ஊர் பொது விஷயங்களை விவாதிக்கும் போதோ அல்லது முக்கியமான பஞ்சாயத்தின் போதோ திருமணமானவர்களின் கருத்துக்கு தான் முன்னுரிமை கொடுப்பார்கள். திருமணமாகதவர்களின் கருத்துகளை பெரிது படுத்தமாட்டார்கள். அவனுக்கு கல்யாணமாகி குடும்பத்தை நடத்துகின்ற பொறுப்பு இருந்தால் நல்லது கெட்டது தெரியும். ஒரு சிக்கலை தீர்க்கும் திறமை இருக்கும் என்ற எண்ணத்தில் விட்டு விடுவார்கள்.

பல திருமண நிகழ்ச்சிகளில் கூட திருமணமாகாத ஆணுக்கோ பெண்ணுக்கோ மரியாதை இருப்பதில்லை. கிராமத்து பரிபாஷையில் பிரம்மசாரிகளை மொட்டைகள் என்றே அழைப்பார்கள். நகரங்களில் வேறுவேறு பெயர்கள் இருக்கலாம். ஆனால் விஷயம் என்னவோ ஒன்றுதான்

இதனால் தான் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளுக்கு கால காலத்தில் திருமணம் செய்து வைத்து விட வேண்டுமென்று துடியாய் துடிக்கிறார்கள். பிள்ளைக்கு திருமணம் முடியவில்லை என்ற கவலையில் மனம் பேதலித்து போன பல தாய்மார்களை நானறிவேன். சில பிள்ளைகளும் தனக்கு திருமணமாக வில்லையே என்ற ஏக்கத்தில் தற்கொலை வரை சென்றுவிடுகிறார்கள்.

இருபத்தி ஐந்து வருடங்களுக்கு முன்பு நடந்த ஒரு சம்பவத்தின் பாதிப்பு இன்னும் கூட என் மனதில் இருக்கிறது. தினகரன் என்ற ஒரு நண்பர் எனக்கு

வெகுநாள் பழக்கம். அவர் சொந்த ஊர் திருவண்ணாமலை என்றாலும் வாரத்தில் இரண்டு நாளாவது என்னை பார்பதற்காக வந்து விடுவார்.

என்னை விட ஐந்து வயது பெரியவர் என்றாலும் வயது வித்தியாசம் பாராமல் பழகுவார். போக்குவரத்து துறையில் கௌரவமான உத்தியோகம். கை நிறைய சம்பளம், உடன் பிறந்த தங்கை மற்றும் பெற்றோரை தவிர பெரியளவில் உறவுகள் கிடையாது.

அவருக்கு ஒரே கவலை, தனக்கு எந்த பெண்ணும் சரிவர அமையவில்லை என்பது தான். பெண் பார்க்க மேலுருக்கு போகிறேன். ஆற்காடு போகிறேன் என்பார் கடைசியில் ஒன்றும் சரிவரவில்லை என்று சோகத்தில் உட்கார்ந்து விடுவார். இவர் எதிர்பார்ப்புக்கு தகுந்த பெண் அமையவில்லையா? அல்லது முயன்று பார்த்தும் எல்லாம் தட்டி கழித்து போனதா என்று எனக்கு அப்போது தெரியாது.

ஆனால் எல்லா நேரமும் திருமணத்தை பற்றியே பேசுவார். அதையே தான் சிந்திப்பார், பல நேரங்களில் அழகான மணைவி, அறிவான குழந்தை என்று கற்பனை விரிய பேசிக்கொண்டே போவார். எனக்கு அது சலிப்பாக கூட இருக்கும். அவர் மனதை புண்படுத்த கூடாது என்று பூம்பூம் மாடு போல தலையாட்டடி கொண்டு இருப்பேன்.

இந்த எண்ணங்களே அவருக்கு மாறி மாறி வலுவாக தாக்க நாளாவட்டத்தில் மனநோயாளியாகி விட்டார். வேலை போனது வீட்டில் உள்ளவர்களின் நிம்மதியும் போனது. ஒரு நாள் தனது உடம்பெங்கும் மண்ணெய் ஊற்றிக் கொண்டு எரிந்து சாம்பலாகி விட்டார்.

அவரது மரணம் மனதில் ஆறாத வடுவாக பதிந்து விட்டாலும் இவரை போல் இன்னும் எத்தைனையோ மனிதர்கள் இருப்பார்கள். அத்தனை பேருடைய கஷ்டங்களை நிவர்த்திக்க எதாவது வழிவகை இருக்கிறதா என்று பலமுறை யோசித்தேன். ஆன்மீக வாழ்வையும் மந்திர பயிற்சிகளையும் மேற்கொண்ட நாள் முதல் திருமண தடையை விலக்கும் தாந்ரிக வழி ஏதாவது கிடைக்காதா என்று தேட ஆரம்பித்தேன் அப்போது தான் சுயம் பார்வதி ஹோமத்தை பற்றியும் அஞ்சனத்தை பற்றியும் விவரங்கள் எனக்கு கிடைத்தது.

சுயம் பார்வதி அஞ்சனம் என்பது மலையத்துவஜ மகாராஜா தனது மகள் மீனாட்சியின் திருமணம் விரைவில் நடைபெற வேண்டும் என்பதற்காக அரண்மனை மாந்திகர்களை கொண்டு உருவாக்கியதாக ஐதீகம் இருக்கிறது. இந்த அஞ்சனத்தை பயன்படுத்திய பிறகு மீனாட்சி சொக்கநாதரை சந்தித்து திருமணம் நடந்ததாக மதுரை ஸ்தலபுராணங்களில் ஒன்று சொல்கிறது. அந்த காலத்தில் இந்த அஞ்சனத்தை மிக சுலபமாக செய்து இருக்கிறார்கள். இப்போது அந்த மூலிகைகள் உற்பத்தி மிகவும் குறைந்து விட்டதினால் ஒவ்வொன்றையும் தேடிப்பிடித்து செய்வது மகா கடினமாக இருக்கிறது.

தாழைமடல், கருந்துளசி வேர், மதிமயக்கி, பூனை மயக்கி, தண்ணீர் விட்டாங் கிழங்கு, திகைப்பூண்டு, சிகப்பு கற்றாழை போன்றவைகளை முறைப்படி காப்பு கட்டி அந்த அஞ்சனம் தயாரிக்க வேண்டும். பிறகு அவற்றில் உருவேற்றுவதற்குய மூல மந்திரம் தனியாக உண்டு. இதை நிறைய செய்து வைத்து பலருக்கு பிரித்து கொடுக்க இயலாது. தனிப்பட்ட ஒருவருக்கென்று பிரத்யேகமாக ஒரு மண்டல காலம் பொறுமையுடன் செய்ய வேண்டும்.

இப்படி செய்து பயன்படுத்த ஆரம்பத்தால் அதிகபட்சமாக ஆறு மாத காலத்திற்குள் எத்தனை தடையுடைய ஜாதகமாக இருந்தாலும் அத்தனை தடைகளையும் நீக்கி நல்லபடியாக திருமணத்தை நடத்தி முடித்து விடலாம்.மேலும் கணவன் மனைவி பிரிந்து இருந்தால் அவர்களை இணைக்கவும் இது பயன் படும் இதை எனது அனுபவத்தில் பலருக்கு பயன்படுத்த கொடுத்து இறைவன் அருளால் வெற்றி கிடைத்திருக்கிறது.

அன்று பார்வதி சொக்கநாதர் திருமணத்தை நடத்தி வைத்ததினால் தான் இதற்கு சுயம் பார்வதி அஞ்சனம் என்ற பெயர் வந்தது. அன்று நடந்த தெய்வீக திருமணம் இன்றும் இந்த அதிசய மூலிகைகளால் நடைபெறுவது ஆச்சர்யம் அல்ல ஆனந்தம்

**6 -** குடும்பங்களை அழிக்கும் சாபங்கள்



அந்த கால முனிவர்களில் பலர் சாபம் கொடுப்பவர்களாக இருந்திருக்கிறார்கள் படைபலம் மிகுந்த அரசர்களே முனிவர்களின் சாபத்திற்கு அஞ்சி நடுங்கி இருக்கிறார்கள்

சாபம் என்பது என்ன? அதற்கு ஏன் அவ்வளவு தூரம் பயப்பட வேண்டும்? என்று நமக்கு தோன்றும்

இந்த கேள்வியை பெரியவர்களிடம் கேட்டால் நல்லவர்களை பக்திமான்களை தவத்தில் உயர்ந்தவர்களை கோபம் அடையும் படி செய்தால் அவர்கள் கோபம் கொண்டு சொல்லுகின்ற வார்த்தைகள் அப்படியே பலித்து விடும் அது தான் சாபம் என்று விளக்கம் தருகிறார்கள்

இந்த விளக்கம் சரியானது போல் தோன்றினாலும் முழுமையானதாக ஏற்று கொள்ள முடியவில்லை

அதற்கு காரணம் பக்திமான்களும் தவ சிரேஷ்டர்களும் மனதை அடக்கியவர்கள் மனம் அடங்கினால் காம குரோத எண்ணங்கள் தானாக அடங்கி விடும்

நிலமை அப்படி இருக்க இவர்களுக்கு கோபம் வருகிறது என்றால் அவர்களை எப்படி ஆன்மிகத்தில் உயர்ந்தவர்களாக கருத இயலும்?

அதனால் பெரியவர்கள் சொல்லும் விளக்கப்படி கோபம் கொள்ள செய்தால் சாபம் கிடைக்கும் என்பது தவறான கருத்தாகும்

உண்மையில் சாபம் என்பதற்கும் கோபம் என்பதற்கும் தொடர்பே இல்லை

நாம் சாதரணமாக பேசுகின்ற போது நமது வார்த்தைகள் தொண்டையில் இருந்து வெளிப்படுவது போல் தோன்றினாலும் அது முற்றிலுமாக அங்கே இருந்து வருவது இல்லை

அடிவயிறு மார்பு மற்றும் தொண்டையில் இருந்து கிளம்புகின்ற உத்வேகம் தான் வார்த்தைகளாக வெளிவருகிறது ஒரு வார்த்தை எதிலிருந்து கிளம்புகிறதோ அதை பொருத்து அந்த வார்த்தைக்கு வலிமை வந்தமைகிறது

உதாரணமாக அன்றாட நடப்புகளை பேசுகின்ற போது நமது மனம் நாலாவிதமான சிந்தனைகளுக்கு ஆட்பட்டு கிடக்கிறது அதனால் வாய் ஒன்றை பேசினாலும் மனது மற்றொன்றில் இருக்கிறது இந்த பேச்சில் ஆழமிருக்காது அவ்வளவாக அர்த்தமும் இருக்காது இதனால் எந்த பயனும் இருக்காது

நாம் ஆசை வசப்படும் போது எதையாவது ஒன்றை எதிர்பார்த்து பேசும்போது அந்த வார்த்தைகள் மார்பிலிருந்து கிளம்புகிறது

இதில் தடுமாற்றம் இருந்தாலும் குறிக்கோளை அடைகின்ற உறுதி இருக்கும் இத்தகைய உறுதி மிக்க வார்த்தைகள் எப்போதெல்லாம் நம்மிடமிருந்து புறப்படுகிறதோ அப்போதெல்லாம் நாம் எதிர் நோக்கும் காரியங்கள் ஓரளவு வெற்றியாகவே முடியும்

ஒவ்வொரு மனிதனுக்கும் எதாவது ஒரு சமயத்தில் தான் அடிவயிற்றில் இருந்து அதாவது நாபியில் இருந்து வார்த்தைகள் புறப்படுகின்றன

அதிகமான சந்தோசமோ சோகமோ அல்லது இவைகளை போன்ற உணர்ச்சி பொங்கும் சூழலில் தான் இங்கே இருந்து சொற்கள் பிறக்கின்றன

அப்படி பிறக்கின்ற சொற்கள் மந்திரமாகவே ஆகி விடுகிறது அந்த சொல் எதை நோக்கி பிரயோகம் செய்யப்படுகிறதோ அங்கே அது நிச்சயமாக பலித்து விடுகிறது அல்லது செயலாக நடந்து விடுகிறது

இப்படி நாபிலிருந்து புறப்படுகின்ற வார்த்தை தான் அமங்கலமாக இருந்தால் சாபம் என்றோ மங்களமாக இருந்தால் வரம் என்றோ அழைக்கப்படுகிறது

எனவே முனிவரின் வார்த்தைகள் சாபமாக வரமாக இருப்பதற்கு இது தான் மூலக்காரணமாக இருக்கிறது

இப்படி நாபியிலிருந்து சாதாரண மனிதர்களுக்கு அடிக்கடி சொற்கள் பிறக்காது முறைப்படி மூச்சி பயிற்சி செய்தவர்களுக்கே இது அவ்வபோது சாத்தியமாகும்

அதனால் தான் எதிரியின் ஆயுதபடைக்கே அஞ்சாத அரசர்கள் முனிவர்களின் சாபங்களுக்கு பயந்தனர் முனிவர்களும் அர்த்தம் இல்லாமல் சுயநலத்திற்காக யாரை வேண்டுமானாலும் சபிப்பது இல்லை

இது முனிவர்கள் மகான்கள் சம்பந்தப் பட்ட விஷயம் நாம் சாதாரண மனிதர்களின் வாழ்க்கையில் எதிர்கொள்ளும் சாபங்களை பற்றி சற்று சிந்திப்போம்

எனக்கு தெரிந்த ஒரு குடும்பத்தில் பெண் குழந்தைகள் யாருமே சந்தோசமாக வாழ்ந்தது இல்லை

அந்த குடும்பத்தில் உள்ள பெண்கள் வயதுக்கு வரும்வரை சாதரணமாக தான் இருப்பார்கள் அதன் பிறகு மனநிலை பாதிப்படைந்தவர் போல் சில காலம் இருப்பார்கள்

சிலர் தற்கொலை செய்து கொள்வார்கள் திருமணம் முடித்து கொடுத்தால் கூட கணவனோடு வாழ மாட்டார்கள் அல்லது அமங்கலியாகி விடுவார்கள்

கணவனோடு நல்லவிதமாக வாழ்ந்தால் குழந்தை இருக்காது இப்படி எதாவது ஒரு குறை அந்த குடும்ப பெண்களுக்கு தொடர்ச்சியாக இருந்து வந்தது

இதற்கு காரணம் என்ன என்று பெரியவர்களை கேட்டால் அந்த குடும்பத்தை ஒரு பெண் சாபம் வாட்டிவதைப்பதாக சொல்கிறார்கள்

அவர்களின் முன்னோரில் ஒருவர் காட்டு வழியாக வந்த ஒரு பெண்ணின் நகைக்கு ஆசைப்பட்டு அவளை கொன்று கருவேல முள்ளிற்குள் வைத்து கதற கதற எரித்து விட்டாறாம்

திருமண வயதுடைய பெண்ணை கொலை செய்ததினால் அந்த பெண்ணின் பாவமும் சாபமும் இன்றும் தொடர்கிறது என்கிறார்கள்

இப்படி எத்தனையோ குடும்பங்களை நாம் காண முடிகிறது நல்ல வசதியோடு வாழ்வார்கள் அரண்மனை வாசிகளை போல அதிகாரம் செலுத்துவார்கள் ஆனால் ஐம்பது வயதை தொடுவதற்குள் எதோ ஒரு விதத்தில் மரணம் அடைந்து விடுவார்கள் இது தொடர்ச்சியாகவும் சில குடும்பங்களில் நடந்தும் வருகிறது

இன்னும் சில குடும்பத்திலோ விசித்திரமான பல சம்பவங்கள் காரண காரியம் இல்லாமலே நடை பெரும் இவைகளை எல்லாம் சாபங்களால் வந்த வினை என்றும் சொல்கிறார்கள்

முனிவர்கள் சாபம் கொடுக்கலாம் அதை போலவே சாதாரண மனிதர்களும் சாபம் கொடுக்க முடியுமா?

முனிவர்களை போலவே சாதாரண மனிதர்களும் நாபியிலிருந்து வார்த்தைகளை வெளிப்படுத்தினால் தானே அது சாபமாகும்?

வெந்ததை தின்று வேளை வந்தால் சாகும் சாதாரண மனிதனுக்கு கூட நாபியிலிருந்து வார்த்தைகள் வருமா? என்று சிலர் நினைக்க கூடும்

நமது இந்து மத ஞானிகள் யோக பயிற்சி செய்து பெறுகின்ற சித்துக்களை உண்மையான பக்தியின் மூலமும் பெறலாம் என்கிறார்கள்

அதாவது யோகாப்பியாசம் என்பது வெற்றி அடையும் போது மனதை குவிய செய்து விடுகிறது அதன் மூலம் சித்துக்கள் வந்தமைகிறது அதே போலவே உணர்வுகள் மிக கூர்மையாகி குவியும் போது மனதும் ஒரு நிலைப்பட்டு விடுகிறது

அதாவது பக்தி காதலாகி கசிந்துருகி கண்ணில் நீர் மல்க நிற்கும் போது மனம் குவிந்து சித்துக்கள் கைவந்து விடுகிறது

இதே போல தான் ஒரு சாதாரண மனிதன் இன்னொரு மனிதனால் தேவையற்ற முறையில் அல்லது அதர்ம வழியில் தாக்கப் படும் போது தன்னையும் மீறிய சோகத்திற்கு ஆட்படுகிறான்

அந்த நேரம் அவன் மனது கடந்த காலம் எதிர்காலம் ஆகிய இருகாலங்களையும் மறந்து நிகழ்காலத்திலேயே நிலைத்து விடுகிறது

சுற்று புற சூழல்கள் அனைத்தும் மறந்து தனக்கு ஏற்பட்ட அதர்மத்தை மட்டுமே நினைத்து நினைத்து மனம் உருகி ஒரு நிலைப் பட்டுவிடுகிறது அப்போது அவனிடமிருந்து வருகின்ற வார்த்தை அடிவயிற்றில் இருந்து ஒரு ஓநாயின் ஓலம் போல வெளிப்பட்டு எதிராளியை தாக்குகிறது எதிரியை மட்டும் அல்ல எதிரின் வம்சத்தை கூட தாக்குகின்ற அளவிற்கு அந்த வார்த்த்தை சத்திமிகுந்த சாபமாகி விடுகிறது

இதனால் பல தலைமுறைகள் காரணமே இல்லாத சோதனைகளை சந்தித்து வாழ்வில் பல இன்னல்களை அனுபவிக்க வேண்டிய நிலை உள்ளது

பாட்டன் முப்பாட்டன் செய்த பாவத்திற்கு ஒன்றுமே அறியாத வாரிசுகள் கஷ்டங்களை அனுபவிக்கலாமா? இது சாத்தியாமா? அவர்கள் பெற்ற சாபம் நம்மை எப்படி தொடரும்? என்று சிலர் கேட்கலாம்

முன்னோர்களால் பெற்ற சாபம் ஒரு தனிமனிதனை வாட்டுகிறது என்றால் அவனவன் ஜாதகப் படிதான் நல்லது கெட்டது நடக்கிறது என்று சொல்வது எப்படி பொருந்தும் என்றும் சிலர் கேட்கலாம்

எனது பாட்டனார் ஒரு சாபத்தை பெற்றார் என்றால் அதன் தாக்கம் அவர் மனதிலும் ஆத்மாவிலும் பரிபூரணமாக ஆக்ரமித்து இருக்கும் அது மரபு தொடர் வழியாக என் தகப்பனாருக்கும் எனக்கும் என்மகனுக்கும் கூட சொந்தமாக வந்தமையும்

இந்த வேளையில் என் ஜாதகமோ என் மகனின் ஜாதகமோ வலுவாக இருந்தால் தாக்கம் குறைவாக இருக்கும் வலுவற்று இருந்தால் அதன் தாக்குதல் அதிகப்படியாகவே இருக்கும்

இன்னொரு விஷயம் ஒவ்வொரு மனிதனின் ஜாதகத்திலும் கிரகங்களின் பலன் என்பது அவனது பூர்வகர்மா அவனது முன்னோர்களின் கர்மா என்பதை பொறுத்தே அமைகிறது

அவனது நிகழ்கால சொந்த கர்மா நல்ல முறையில் அமைந்தால் கஷ்டங்களில் இருந்து சுலபமாக விடுபட வழிவந்தமயும் அல்லது அத்தகைய பூர்வ கர்மாவின் தாக்குதலை கிரகங்கள் இறக்கம் இல்லாமல் தருவதை குறைத்து கொள்ளவும் வழி கிடைக்கும்

பொதுவாக நமது சித்தர்கள் இத்தகைய சாபங்க்களில் இருந்து விடுப்பட பல தான தர்மங்களையும் பூஜா விதிகளையும் சொல்லியிருந்தாலும் சில ரகசிய வழிகளையும் சொல்லியிருக்கிறார்கள்

உதாரணமாக மூன்று தலை முறைக்கு முன்னால் இருந்து தாக்குகின்ற சாபத்தை நீக்க குருவரிகற்றாளை,வனபிரம்மி,முப்பிரண்டை,வெண்ணாவல் ஆகிய மூலிகைகளை மந்திர வழியில் பயன் படுத்தும் விதத்தை புலிப்பாணி சித்தர்,கோரக்கர் போன்ற மகா சித்தர்கள் சொல்லியிருக்கிறார்கள்

இதன் வழியில் செய்தால் நிச்சயம் ஓரளவாது சாபக் கொடுமையிலிருந்து குடும்பங்கள் மீண்டு வரலாம்

இந்த மூலிகைகளை சிலருக்கு முறைப்படி செய்து கொடுத்திருக்கிறேன் அவர்கள் அதை பயன்படுத்தி மிக நீண்ட காலமாக அனுபவித்து வரும் துயரங்களிலிருந்து விடுப்பட்டு இருக்கிறார்கள்

சாபத்தை மூலிகைகள் எப்படி நீக்கும் என்ற சந்தேகம் சிலருக்கு வருவது இயற்கை

சாபம் என்பது வலுவான எண்ணங்களின் கூட்டு வடிவமாகும் இது பிரபஞ்ச ஆகர்சன சக்தி மூலம்தான் குறிப்பிட்ட மனிதனை வந்தடைகிறது

அப்படி வருகின்ற எண்ண அலைகளை வலுவோடு தாக்காமலும் மாற்று வழியில் அனுப்பி வைக்கவும் மூலிகையில் உள்ள சில அபூர்வ சக்திகள் துணை செய்கின்றன

அந்த சக்திகளே சாபத்திலிருந்து மனிதனை காப்பாற்றுகிறது.

## 7 - தங்கம் செய்வதற்கான வழி !



அம்மன் கோவில்கள் இல்லாத தமிழ்நாட்டு கிராமங்களே இல்லை என்று சொல்லலாம் தில்லையில் ஆனந்த தாண்டவம் ஆடுகின்ற அப்பன் நடராஜ பெருமானையும் ஸ்ரீ ரங்கத்தில் அனந்தசயனத்தில் ஆழ்ந்திருக்கும் எம்பெருமான் ஸ்ரீமத் நாராயணனையும் அன்பு கொண்டு போற்றி வணங்குபவர்கள் நாடு முழுவதும் உண்டு என்றாலும் அப்பனை வழிபடுபவர்கள் அதிகமா? அம்மையை தொழுபவர்கள் அதிகமா? என்று ஒரு கேள்வியை கேட்டால் கண்ணை மூடிக்கொண்டு அம்மையின் அருளை நாடி நிற்பவர்களை அதிகம் என்று சொல்லலாம். அந்த அளவு அம்பிகையின் அருள் கடாட்சம் நமது ஊர்கள் தோறும் இல்லங்கள் தோறும் நிரம்பி வழிகிறது அப்படிப்பட்ட அம்மையின் ஆலயத்தை காணுகின்ற போதெல்லாம் எனக்கு ஒரு எண்ணம் தோன்றும் அன்னை வழிபாடு மட்டும் இந்த நாட்டில் குறிப்பாக தமிழ்நாட்டில் இல்லை என்றால் என்றோ கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்ற தான்தோன்றித்தனமான நாத்திக கூட்டம் பெருகி இருக்கும்.

இப்படி நான் கூறுவதில் சிலருக்கு திகைப்பு இருக்கலாம் சிலர் இது மிகைப்படுத்தப்பட்ட வாதம் என்றும் ஒதுக்க பார்க்கலாம் ஆனால் நான் சொல்வதின் உட்பொருளை நன்றாக உள்வாங்கி கொண்டால் உண்மை என்னவென்று தெளிவாக தெரியும். நமது நாடு விடுதலை பெற்ற பிறகு தமிழ்நாட்டில் உள்ள சில பெரிய மனிதர்கள் பதவியை பிடிக்க வேண்டும் அதிகாரத்தை அனுபவிக்க வேண்டும் என்ற எதிர்பார்ப்பில் மக்கள் மத்தியில் இல்லாத பிளவுகளை தங்களது கற்பனைத்திறத்தால் உருவாக்கி உலவ விட்டார்கள் தாங்கள் கண்டுபிடித்த போலியான வாதத்திற்கு எவரும் ஆதாரங்களை கேட்டுவிடக்கூடாது என்பதற்காக ஆராயத்தெரியாத இளைய மனதுகளை சுலபமாக சுண்டி இழுக்கும் நாத்திக வாதத்தை மேடை தோறும் முழங்க ஆரம்பித்தார்கள் மேடையேறி பேசுவதில் கூட்டத்தை சேர்ப்பதும் சேர்த்த கூட்டத்தை ஒட்டுமொத்தமாக மூளைச்சலவை செய்வதும் சற்று கடினம் என்பதற்காக மக்கள் ஊடகங்களான திரைப்படம் நாடகம் பத்திரிக்கை போன்றவைகளிலும் ஆக்கிரமித்து மிக ஆரவாரமாக செயல்பட்டார்கள் அதன் விளைவாக அவர்களால் ஓட்டுக்களை அறுவடை செய்து பதவிகளை பிடிக்க முடிந்தது ஒரு சிறிய கூட்டத்தை பகுத்தறிவாதிகள் என்ற பெயரில் உருவாக்கி விடவும் முடிந்தது.

பதவிகளை பிடிக்க முடிந்த அவர்களால் மக்களின் ஆன்மீக நம்பிக்கையை அசைத்து கூட பார்க்க முடியாமல் போனதற்கு மிக முக்கிய காரணம் ஆத்திகவாதிகள் ஆக்கப்பூர்வமாக செய்த காரியங்கள் அல்ல இன்னும் சொல்ல போனால் நாத்திக கூட்டத்தை முறியடிப்பதற்கு ஆத்திக மனங்கள் எதுவுமே செய்யவில்லை தாங்கள் எப்போதும் செய்வது போன்ற தங்களது பங்காளிச்சண்டைகளை நடத்தி கொண்டிருந்தார்களே தவிர தங்களை சூழ்ந்திருக்கும் அபாயத்தை உணரக்கூட அவர்கள் தலைப்படவில்லை ஆனால் அவர்கள் செய்ய வேண்டிய வேலையை அம்மன் கோவில்களும் அந்த கோவில்களின் திருவிழாக்களும் செய்தன. வயதில் பெரியவர்களாக இருக்கட்டும் சிறியவர்களாக இருக்கட்டும் வருடா வருடம் வழக்கப்படி நடக்கின்ற ஊர் திருவிழாக்கள் நடக்கவில்லை என்றால் ஊரில் அசம்பாவிதம் நடந்து விடுமோ என்ற அச்சத்தாலும் இறைவழிபாட்டின் மீது கொண்ட மிக

தீவிரமான நம்பிக்கையாலும் பகட்டான பகுத்தறிவு வாதம் தங்களை அண்டாமல் காத்துக்கொண்டார்கள் என்று துணிந்து சொல்லலாம்.

இதயத்தில் உள்ளிருந்து பீறிட்டு வருகின்ற அன்பால் இறைவனை வணங்குவதற்கும் அச்சத்தால் வணங்குவதற்கும் நிறைய வேற்றுமைகள் உண்டு அன்பின் வெளிப்பாடாக பக்தி இருந்தால் அதில் மூடநம்பிக்கை முளையிடாது அச்சத்தால் வருகின்ற பக்தியாக இருந்தால் மிக கண்டிப்பாக தவறுதலான நம்பிக்கைகள் வளர ஆரம்பிக்கும் துரதிரஷ்டவசமாக அன்பை விட அச்சம் நமது மக்கள் மத்தியில் சற்று தூக்குதலாக இருந்ததனால் மூட நம்பிக்கைகளே பல இடங்களில் பளிச்சிட்டன அதன் விளைவாகவே ஆன்மீக வியாபாரிகளும் கபட வேடதாரிகளும் பல இடங்களில் கண்களுக்கு தென்பட்டனர் உண்மையான வழிகாட்டிகளை மக்கள் அடையாளம் கண்டுக்கொள்ள சிரமப்பட்டார்கள் ஆன்மீக சிந்தனை என்பது முழுமை பெற்ற செயல் வடிவமாக மாறவேண்டுமானால் ஆன்மாவின் உள்ளிருந்து உந்து சக்தி பெருக்கெடுப்பதும் அதை சரியான கோணத்தில் திசை திருப்பிவிட புறச்சூழலிருந்து நல்ல தூண்டுதலும் கண்டிப்பாக அவசியம் அதாவது ஒரு மனிதனின் உண்மையான ஆன்மிக நோக்கம் நிறைவு பெற வேண்டுமானால் குரு என்பவர் மிகவும் அவசியம் அதனால் தான் நமது முன்னோர்கள் குருவில்லா வித்தை பாழ் என்றார்கள்.

ஒவ்வொரு ஆன்மாவும் படைக்கப்பட்டதற்கு உண்மையான காரணம் அவைகள் பூரணத்துவத்தை எய்த வேண்டும் என்பதே ஆகும். பிறப்பெடுத்த ஒவ்வொரு உயிரும் கடைசியில் பூரணத்தை அடைய வேண்டும் அப்படி அடையும் வரையில் மீண்டும் மீண்டும் பிறந்தே ஆகவேண்டும் என்பது நமது இந்து மதத்தின் ஆதார தத்துவமாகும். நாம் இப்போது வாழ்ந்து கொண்டிருக்கின்ற வாழ்க்கை முன்பு நாம் வாழ்ந்த வாழ்க்கையின் எண்ணிய எண்ணங்களின் செய்த செயல்களின் தொகுப்பே ஆகும். இனி அடுத்ததாக பெறக்கூடிய வாழ்க்கை இப்போது நாம் செய்து கொண்டிருக்கின்ற செயல்களின் விளைவாக கிடைக்கப்போவதாகவும். எனவே கிடைக்கப்போவது நல்லவிதமாக கிடைப்பதற்கு இப்போதைய காரியங்கள் நற்காரியங்களாக இருக்க வேண்டும் அந்த செயல்களை நோக்கி நம்மை நகர்த்துவதற்கு புறசக்திகளும் நமக்கு துணை செய்ய வேண்டும்.

ஆன்மீக முன்னேற்றத்திற்காக கிடைக்கின்ற வெளித்தூண்டல் புத்தகங்களின் மூலமாக பெற்றுவிடலாம் என்று சிலர் தவிர்க்க நினைக்கிறார்கள் நூல்களின் மூலமாக அறிவை வளர்த்து கொள்ளலாமே தவிர அனுபவத்தை வளர்த்து கொள்ள இயலாது. ஒரு ஆன்மா வளர வேண்டுமானால் அதற்கு இன்னொரு ஆன்மாவால் நேரடியாக தூண்டப்பட வேண்டும் அதாவது பௌதீகமான வழிகாட்டுதல் இல்லாமல் எதுவும் நிகழாது சிலர் நினைக்கலாம் புத்தகங்களின் கிடைக்கும் அறிவையும் நமது உள்ளுணர்வையும் சரிவர பயன்படுத்தினால் இலக்கை அடைந்து விடலாம் என்று இதை தவறுதலான கருத்து என்று சொல்ல முடியாவிட்டாலும் யதார்த்தமான நிலைகளுக்கான வழி என்று ஏற்றுகொள்ள இயலாது. காரணம் நடைபழக தெரியாத குழந்தைக்கு நடைவண்டியை கொடுத்தால் மட்டும் போதாது நடைவண்டியை பயன்படுத்துவதற்கான முறைகளையும் நாம் சொல்லி கொடுக்க வேண்டும். வெறும் சூத்திரங்களை மட்டுமே வைத்து கொண்டு கணக்கு போடுவதை விட

சூத்திரத்தை உருவாக்கியவர்களை நம்பி கணக்கு போட்டால் உடனடியான பலனை பெறலாம். இதை ஒவ்வொரு மனிதனுக்கும் குருதேவர் என்று ஒருவர் அவசியம் என்ற எனது வாதத்தை வலுப்படுத்துவதற்காக சொல்லவில்லை என் அனுபவத்தில் உணர்ந்ததால் சொல்கிறேன்.

இருபது வருடங்களுக்கு முன்பு எனக்கொரு ஆசை தோன்றியது ஏழை எளியவர்களுக்கும் திக்கற்றவர்களுக்கும் உதவி செய்ய வேண்டுமானால் பணம் அவசியம் தேவை அந்த பணத்தை உடனடியாக அளவுக்கு அதிகமாக பெற்றால் மட்டுமே உதவி செய்ய இயலும் என்று நம்பினேன் அதற்கு பணத்தை பெருவதற்காக என்னென்ன வழிமுறைகள் இருக்கிறது என்று மிகத்தீவிரமாக சிந்தித்தேன் அப்படி சிந்தனை செய்ததின் விளைவாக ஒரு வழிமுறை எனக்கு தென்பட்டது அந்த காலத்தில் வாழ்ந்த சித்தர்கள் பலர் மக்களுக்கு தொண்டாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் தங்கத்தை தாங்களாக உருவாக்கி அதன் மூலம் பணம் பெற்று பல காரியங்களை சாதித்திருக்கிறார்கள் நாமும் கூட அவர்கள் காட்டிய வழியில் சென்று இரசவாதம் செய்து தங்கத்தை உருவாக்கினால் என்ன? என்பதே அந்த வழிமுறையாகும்.

தங்கம் செய்ய வேண்டும் என்ற எண்ணம் வந்ததோ இல்லையோ அதற்கான தேடுதல்களில் ஈடுபட ஆரம்பித்து விட்டேன். சரஸ்வதி மகாலில் உள்ள மிக பழைய நூல்களில் தங்கம் செய்வதற்கான விளக்கங்கள் இருக்கிறது அவற்றை எல்லாம் தேடிப்பிடித்து படித்தால் கண்டிப்பாக தங்கம் செய்வதற்கான சூத்திரம் கிடைக்குமென்று ஒரு நண்பர் சொன்னார். பிறகு சும்மா இருக்க முடியுமா? தஞ்சாவூரில் மட்டுமல்ல தமிழகத்தில் உள்ள பல ஊர்களிலும் இரசவாத கலையை சொல்லுகின்ற நூல்களை அசுர வேகத்தில் தேடிப்படிக்க ஆரம்பித்தேன் படித்த படிப்பினால் பக்கங்கள் நகர்ந்தனவே ஒழிய உருப்படியான ஒரு விஷயத்தை கூட கண்டுபிடிக்க முடியவில்லை. மனதில் சோர்வு இருந்தாலும் தோல்வியை ஒத்து கொள்கின்ற ஜாதியாக நான் பிறக்கவில்லை எனவே ஆயிரம் தடைகள் இருந்தாலும் அத்தனையையும் பொறுத்து கொண்டு மீண்டும் மீண்டும் தேடத் துவங்கினேன் அப்படி தேடியதன் விளைவாக இரசவாதம் செய்வதற்கு தேவையான பல மூலப்பொருள்களின் பெயர்களை தெரிந்து கொண்டேன்.

அப்படி நான் அறிந்த பெயர்களில் ஏமப்பால் என்பது ஒன்றாகும் பசும்பால், ஆட்டுப்பால் என்பது தெரியும் ஏன் கள்ளிச்செடியில் கூட பால் வருவது தெரியும். ஏமப்பால் என்பது பற்றி கேள்விப்பட்டதே இல்லையே என்று குழம்பினேன், பல சித்த வைத்தியர்களிடம் மூலிகையை பற்றி விபரம் தெரிந்தவர்களிடம் நச்சரித்து கேட்டு பார்த்தேன் அவர்களும் கைவிரித்தார்களே தவிர பதிலை தரவில்லை. மூலிகை குண அகராதிகள் சித்தர்களின் பரிபாஷை அகராதிகள் தமிழ் நிகண்டுகள் என்று தேடித்தேடி சோர்வடைந்த போது சிந்தாமணி நிகண்டு என்ற ஒரு பழைய நூலில் ஏமப்பால் என்றால் பன்றியுடைய பால் என்பதை அறிந்தேன். அறிந்த மாத்திரத்தில் ஏதோ தங்கமே செய்து கைநிறைய பெற்று விட்டது போல கற்பனை சிறகடித்து பறந்து வானமண்டலத்தையும் தாண்டிச்சென்றது. பன்றியினுடைய பாலுக்கா அர்த்தம் புரியாமல் இவ்வளவு நாளும் ஏறக்குறைய ஒன்றரை வருடம் அலைந்தோம் என்று வெட்கம் கூட வந்தது.

சரி இனி பன்றியின் பாலை பெற்று இரசவாதத்தை துவங்கி விடலாம் என்ற எண்ணத்தில் பன்றி வளர்ப்பவர் ஒருவரை பார்த்து எனக்கொரு ஐந்து லிட்டர் பன்றி பால் தேவைப்படுகிறது உங்களால் தரமுடியுமா? என்று கேட்டேன். அவர் என்னை ஒரு விசித்திரமான பிராணியை பார்ப்பது போல மேலும் கீழும் பார்த்து விளையாடுகிறீர்களா என்று கேட்டார். எனக்கொன்றும் புரியவில்லை நான் ஒன்றும் தவறுதலாக கேட்கவில்லையே பன்றி வளர்ப்பவரிடம் தானே பன்றியின் பால் கேட்கிறோம் என்னவோ புலிப்பால் கேட்டது போல இவர் நம்மை முறைக்கிறாரே என்று எனக்கு தோன்றி விளையாடவில்லை நிஜமாகத்தான் கேட்கிறேன் எனக்கு பன்றியின் பால் அவசியம் தேவை என்று சொன்னேன் அதற்கு அவர் சிரித்து கொண்டே ஆடுமாடுகளில் பால் கறப்பதை போல பன்றியில் பால்கறக்க இயலாது பன்றிக்குட்டி மடுவில் வாய் வைத்து உறிஞ்சினால் தான் பால்வரும் கறந்தால் வராது என்று சொன்னார் அப்போது தான் எனக்கு அந்த விஷயமே தெரிந்தது.

பன்றிக்குட்டியின் வாயிலிருந்து பாலை எடுப்பதாக இருந்தால் அதனுடைய எச்சிலும் சேர்ந்தே வரும் அப்படி வருகிற போது பாலினுடைய சுயத்தன்மை என்பது நிச்சயமாக மாறிவிடும். எனவே அது இரசவாதத்திற்கு உதவாது ஏமப்பால் என்பது நிச்சயம் பன்றியின் பாலாக இருக்காது என்ற முடிவிற்கு வந்து விட்டேன் இரசவாதத்தில் தேவைப்படுகிற பல பொருள்களில் ஒன்றை தேடி கண்டுபிடிப்பதற்கே இத்தனை சிரமமாக இருக்கிறதே அத்தனை பொருள்களையும் இனம்கண்டு சேகரிப்பது என்றால் அது நடக்ககூடிய விஷயமா? அதை நம்மால் செய்ய முடியுமா அவ்வளவு சிரமப்பட்டு அது நமக்கு தேவைதானா என்று சிந்திக்க ஆரம்பித்து விட்டேன். அதனால் இரண்டு வருடமாக எனக்குள் ஓடிய இரசவாதம் என்ற நெருப்பு ஆறு ஏறக்குறைய வற்ற ஆரம்பித்து விட்டது என்றே சொல்லலாம். சிறிது காலத்தில் அவைகளை மறந்தும் போய்விட்டேன்.

ஒரு சமயத்தில் ராஜேந்திரன் ராஜு என்ற ஆந்திராவை சேர்ந்த ஒரு நண்பரிடம் நல்ல பழக்கம் இருந்தது அவருக்கு நிறைய விஷயங்கள் தெரியும் தனது வாழ்நாளில் பெரும்பகுதியை காடுகளில் கழித்தவர் அவர் இதனால் காடுகளின் இரகசியம் மூலிகைகளின் அதிசயம் போன்றவைகளை அவர் கூறுவதை வாய்பிளந்து கேட்டுகொண்டே இருப்பேன் வெளுத்த முடியை கறுப்பாக்கும் மூலிகை, சுருக்கம் விழுந்த தோல்களை பளபளப்பாக்கும் மூலிகை, இளமையை தரும் மூலிகை என்று அடுக்கடுக்காக சொல்வார். அவருக்கு மூலிகையை பற்றிய பல இரகசியங்களை காட்டுவாசிகளும் காடுகளில் வாழுகிற சில சாமியார்களும் சொல்லி கொடுத்திருந்தார்கள் அவருடைய அளப்பரிய மூலிகை ஞானத்தை கண்டு வியந்த நான் இவருக்கு ஏமப்பாலை பற்றிய விபரம் தெரிகிறதா என்பதை அறிந்து கொள்ள அவரிடம் கேட்டேன் அதற்கு அவர் மிகத்தெளிவான பதிலை சில வினாடிகளில் சொல்லி என்னை அதிர வைத்தார்.

ஏமப்பால் என்பது மண் புழு இருக்கிறதே அவைகளை உயிரோடு பிடித்து தயிரில் ஊற வைக்க வேண்டும் அப்படி ஊற வைக்கும் போது மண்புழுவின் வயிற்றுக்குள் இருக்கின்ற மண்களை எல்லாம் வாந்தி எடுத்து விட்டு புழு செத்துவிடும் அப்படி செத்த புழுவை எடுத்து வெயிலில் காய வைத்தால்

புழுக்கள் செப்பு கம்பிகள் போல விரைத்து விடும் ஏனென்றால் மண்புழுவின் உடல் முழுவதுமே செப்பு சக்திகளே அதிகம் அப்படி காய்ந்த மண்புழுவை வாணலில் போட்டு உருக்கினால் ஒருவித நெய் வரும் அந்த நெய்யின் பெயரே ஏமப்பால் என்று சொன்னார். உண்மையாகவே அதிர்ந்து விட்டேன் நமது சித்தர்களின் பரிபாஷைக்கு இவ்வளவு ஆழமான மறைமுகமான பொருள்கள் இருக்கிறதா? என்பதை சிந்தித்த போது மூச்சு விடுவதற்கே சிரமமாக இருந்தது.

இதை இங்கே ஏன் சொல்கிறேன் என்றால் ஆயிரமாயிரம் ரூபாய்களை கொட்டி எண்ணில் அடங்காத புத்தகங்களை வாங்கி கண்கள் பூத்து போகிற வரை படித்தாலும் கூட தெரியாத விஷயங்களை நுண்ணறிவை பயன்படுத்தி உள்ளுணர்வை தட்டி எழுப்பி குடைந்து குடைந்து பார்த்தாலும் அகப்படாத விஷயத்தை ஒரு நொடியில் தக்க குருமார்கள் தொட்டு காட்டி விடுகிறார்கள். இதனால் தான் பெரியவர்கள் குருவில்லா வித்தை பாழ் என்று சொன்னார்கள் என்பதை புரிந்து கொண்டேன் இப்படி நமது வாழ்க்கையில் ராஜேந்திர ராஜுவை போல எத்தனையோ குருமார்களை அடையாளம் தெரியாமல் அறியாமையால் தவற விட்டு விட்டு ஆன்மீக பாதையில் முன்னேறி செல்ல முடியாமல் மீண்டும் மீண்டும் பிறந்து அவதிப்படுகிறோம். எனவே தான் எனக்கு ஒரு யோசனை தோன்றியது எனது வாழ்நாளில் இதுவரை பல குருமார்களை சந்தித்திருக்கிறேன் அவர்களிடமிருந்து நான் பல அபூர்வ விஷயங்களை பெற்றிருக்கிறேன் அவற்றை எல்லாம் வாசகர்களோடு பகிர்ந்து கொண்டால் அவர்களும் தங்களின் குருமார்களை அடையாளம் தெரிந்து அடைக்கலம் அடைவதற்கு வசதியாக இருக்கும் அவர்களது பிறவிப்பயணம் சுலபமானதாக சுகமானதாக மிக நீண்ட நெடிய பயணமாக இல்லாமல் இருக்கும் என்பதை உணர்ந்து அவ்வப்போது உங்களிடம் பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறேன்.

## 8 - வசியப்படுத்துவது தவறல்ல !



அந்த மனிதருக்கு எழுபது வயது இருக்கும் ஒரு காலத்தில் ராஜபோகமாக வாழ்ந்ததற்கான அறிகுறிகள் கண்களிலும் பேச்சிலும் தெரிந்தது ஆனால் பார்ப்பதற்கு கண்ணக்கள் ஒட்டி தோல் வறண்டு தலைமுடியை கூட

ஒழுங்காக வாராமல் வறுமையான தோற்றத்தோடு என் முன்னால் நின்றார் எத்தனையோ இடங்களின் கதவுகளை தட்டி விட்டேன் எங்கேயும் எனக்கு நிவாரணம் கிடைக்கவில்லை கடேசியாக உங்களிடம் வந்திருக்கிறேன் நீங்களும் எனக்கு நிவாரணம் தரவில்லை என்றால் வராத எமனை வலிய வரவழைப்பதை தவிர வேறு மார்க்கம் எனக்கில்லை என்றார்

அவர் சொற்களில் வெளிப்பட்ட விரக்தியும் குரலில் காணப்பட்ட நடுக்கமும் எல்லோரையும் திரும்பி பார்க்க செய்யும் என் மனமும் அவர்பால் திரும்பி உங்களுக்கு என்ன பிரச்சனை அதற்கு என்ன நிவாரணம் வேண்டும் என்று கேட்டேன் என் முன்னால் போடப்பட்டிருந்த நாற்காலியில் அமர்ந்த அவர் சட்டை பையில் இருந்து ஒரு போட்டோவை எடுத்து என்னிடம் கொடுத்தார் அது ஒரு அழகான இளம் தம்பதியின் போட்டோ யார் இவர்கள் என்று கேட்டேன்

படத்தில் மாலையும் கழுத்துமாக சிரிப்பது என் மகனும் மருமகளும் இருவருக்கும் இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணம் நடந்த போது எடுத்த படம் இது என்று கூறிய அவர் தான் வந்த காரணத்தை என் முன்னால் விவரிக்க ஆரம்பித்தார் அவர் சொல்ல சொல்ல என் கண்முன்னால் இன்றைய யதார்த்தமான தமிழ் சமூகத்தின் நிலை எழுந்து நின்று கோர சிரிப்புடன் என்னை முறைத்தது

ஐயா எனக்கு திருவாரூர் பக்கத்தில் ஒரு கிராமம் காவேரியின் கருணையால் என் கிராமம் இன்று கூட பசுமையாகத்தான் இருக்கிறது பழங்கால கோவிலும் பழகுவதற்கு இனிய மக்களும் எங்கள் கிராமம் பெற்ற வரப்பிரசாதமாகும் என் தந்தையார் ஒரு திண்ணை பள்ளி ஆசிரியர் நல்ல விவசாயி நானும் என் அண்ணனும் இரண்டு அக்கா மாறும் அவருக்கு குழந்தைகள் இப்போது அவர்களில் நான் மட்டுமே உயிரோடு இருக்கிறேன்

என் தந்தையாருக்கு தமிழ் மீது நிறைய ஈடுபாடு இருந்ததால் என்னை தமிழ் படிக்க வைத்தார் நான் தமிழில் முதுகலை பட்டம் வரை பெற்று ஆசிரியர் பயிற்சிக்கான பட்டயமும் பெற்றேன் தஞ்சாவூரில் ஒரு நடுநிலை பள்ளியில் ஆசிரியராக வாழ்வை துவங்கினேன் எனது தாயாரின் தம்பி மகளையே திருமணம் செய்தேன்

எனக்கு மனைவியாக அமைந்தவள் மானிட பெண்ணே அல்ல தேவலோகத்தில் இருந்து வந்த மாதரசி என்று சொன்னால் அது மிகையில்லை எனக்கு மதி சொல்லும் மந்திரியாக தொண்டு செய்யும் சேவகியாக தவறுகளை சுட்டிகாட்டுவதில் தோழியாக என்னை கவனித்து கொள்வதில் தாயாக தவறு செய்யும் போது தண்டிக்கும் அதிகாரியாகக் அவளிருந்தாள் நாங்கள் இருவரும் ஒருநாள் கூட சண்டை போட்டுக்கொண்டு முகத்தை திருப்பிகொண்டது கிடையாது

ஏனோ தெரியவில்லை எங்கள் திருமணம் முடிந்து ஏழு வருடங்களுக்கு பிறகே ஒரு மகன் பிறந்தான் அவன் மட்டும்தான் எங்களுக்கு குழந்தை வேறு குழந்தைகள் எதுவம் கிடையாது ஒரே மகன் என்பதனால் அவன் மீது நாங்கள் இருவரும் உயிரையே வைத்திருந்தோம் அவன் சிரிப்பது அழுவது நடப்பது ஓடுவது என்று அவன் சம்பந்தப்பட்ட எல்லாமே எங்களுக்கு சொர்கமாகத்தான் தெரிந்தது என்று சொன்ன அவர் நீண்ட பெருமூச்சி விட்டு சற்று நேரம் கண்களை மூடிக்கொண்டு அமைதியாக இருந்தார் மூடிய கண்களுக்குள் குழந்தையான மகன் விளையாடிய மழலை சொல் பேசிய சம்பவங்கள் திரைப்படம் போல் ஓடுயிருக்க வேண்டும் அவர் முகத்தில் தெரிந்த மந்தகாச புன்னகை அதை சொல்லாமல் சொல்லியது

என் மகனை நாங்கள் தரை மீது நடக்க விட்ட காலம் மிக குறைவு புதிய புதிய ஆடைகள் கண்ணை கவரும் வண்டி வாகனங்கள் என்று அவன் எதை கேட்டானோ எதை விரும்பினானோ அத்தனையையும் உடனுக்குடன் செய்து கொடுத்தோம் ஒரே பிள்ளை செல்ல பிள்ளை என்பதற்காக அவன் படிக்காமல் ஒழுக்கமில்லாமல் ஊர் சுற்றியது ஒருநாள் கூட கிடையாது படிப்பில் என் அப்பா போல அவன் மாக கெட்டிக்காரன் டாக்டருக்கு தான் படிப்பேன் என்றான் பூர்விக சொத்தில் என் பங்கையும் சேமிப்பில் இருந்த பணத்தையும் போட்டு மெடிக்கல் சீட் வாங்கி கொடுத்தேன்

பெற்றவர்களின் கஷ்டத்தை உணர்ந்து நன்றாக படித்தான் ஆனாலும் நாங்கள் எங்கள் சிரமத்தை அவனிடம் எப்போதுமே காட்டியது இல்லை அவனுக்கு கொடுக்காத பணம் எங்களுக்கு எதற்கு அதனால் அவன் சில நேரங்களில் அதிகப்படியாக செலவு செய்தால் கூட அதை கண்டிப்பதில்லை அவன் படிக்கும் காலம் முழுவதும் அவன் எங்களோடு இல்லையே என்று வருத்தபட்டோமே தவிர வேறு எந்த கஷ்டமும் கிடையாது

கடவுள் அருளால் நல்லவிதாமாக படித்து முடித்து வெளியில் வந்தான் வெறும் எம்.பி.பி.எஸ் படித்தால் போதாது இன்னும் மேலே படிக்க வேண்டும் என்று விருப்ப பட்டான் அதனால் நான் கடன் பட்டேன் கவலை பட வில்லை பையனை மேலும் படிக்க வைத்தேன் அதையும் அவன் நல்ல விதமாக முடித்து விட்டு சென்னையில் பெரிய மருத்துவ மனை ஒன்றில் பணிக்கு சேர்ந்தான் இந்த நேரத்தில் தான் தன்னோடு பணி புரியும் ஒரு பெண்ணை விரும்பி இருக்கிறான் அவளும் டாக்டர் தான் தனது விருப்பத்தை எங்களிடம் சொன்ன போது நாங்கள் அதை மறுக்க வில்லை அந்த பெண்ணையே கட்டி வைக்கிறோம் என்று சொல்லி அதற்க்கான வேலைகளை கவனித்தோம்

அந்த பெண் எங்கள் ஜாதி அல்ல அவள் சொந்த ஊர் நாகர்கோவில் அவள் தந்தையார் அந்த பகுதியில் புகழ் பெற்ற மருத்துவர் என் பையனுக்கு பெண்ணை தர அவ்வளவு சீக்கிரம் சம்மதிக்க வில்லை பல்வேறு நிற்பந்தங்களுக்கு பிறகே திருமணத்திற்கு ஒத்துக்கொண்டார் நல்லபடியாக கல்யாணம் முடிந்தது

இந்த வேளையில் என் மனைவியை கொடுமையான புற்று நோய் தாக்கியது ஒவ்வொரு வினாடியும் அவஸ்தை பட்டு என்னையும் வேதனையில் துடிக்க விட்டு புண்ணியவதி போய் சேந்து விட்டாள் நான் பணி ஓய்வு பெற்ற போது கிடைத்த பணம் எல்லாமே பையனின் படிப்பிற்கு போய் விட்டது மனைவிக்கு வைத்தியம் பார்ப்பதற்கு கூட என்னிடம் அப்போது பணமில்லை என் வாழ்வில் முதல் முறையாக என் மகனிடம் என் கஷ்டத்தை பேசினேன் எப்படியும் அம்மா சிகிச்சைக்கு பணம் பார்த்து விடலாம் கவலை படாதீர்கள் என்று ஆறுதலாக பேசினான் எனக்கு நான் சாய்ந்து கொள்ள வலுவான தோள் கிடைத்திருக்கிறது என்ற சந்தோசம் பிறந்தது

ஆறுதலாக பேசிய மகன் இரண்டு நாளில் முற்றிலுமாக மாறுபட்டு என்னோடு பேசினான் அப்பா அம்மாவுக்கு வந்திருக்கும் நோய் நிச்சயம் குணமாகாது தீராத நோயை தீர்பதற்கு கடன்பட வேண்டுமா? என்னால் முடியாது என்று நினைக்கிறேன் நீங்கள் நன்றாக யோசித்தால் நான் சொல்வதை சரி என்பீர்கள் என்றான் என் இதயத்தில் சம்மட்டி கொண்டு அடித்தது போல் இருந்தது என் மகனா நான் பெற்ற மகனா என் மனைவியின் உதிரத்தில் வளர்ந்த மகனா இப்படி பேசுகிறான் என்னால் நம்பவே முடியவில்லை அவன் சொற்களை ஜீரணிக்கும் சக்தி எனக்கில்லை

பெற்ற பிள்ளை தாயை கைவிட்டது போல் கட்டிய கணவன் மனைவியை கைவிட முடியுய்மா எப்படியும் சாகபோகிறாள் என்பதற்காக நோயோடு போராடாமல் இருக்க முடியுமா மனம் தான் பொறுக்குமா? மகன் படிப்பிற்காக கடன்காரனாக நின்ற நான் என் மனைவிக்காக பிச்சை எடுக்கவும் தயாராகி விட்டேன் போகாத இடமெல்லாம் போனேன் கேட்காதவர்களிடமெல்லாம் கேட்டேன் என்னால் முடிந்த வரை மனைவியை காக்க போராடினேன் ஆனாலும் தோற்று போனேன் இப்போது தனிமரமாக நிற்கிறேன்

கடனுக்கு காரணமான மனைவி போய்விட்டாள் கடன் பட்ட நான் இருக்கிறேன் அல்லவா அதனால் கொடுத்தவர்கள் கேட்பார்கள் என் சொற்ப ஓய்வூதியத்தை வட்டிகொடுக்க மட்டுமே பயன்படுத்துகிறேன் கடனை முழுமையாக அடைக்க வழி தெரியவில்லை வெட்கத்தை விட்டு மகனிடம் மீண்டும் கேட்டேன்

அவன் இறக்கமே இல்லாமல் பத்து பைசா கூட தரமுடியாது என்று சொல்லிவிட்டான் பற்று பாசத்தோடு இருந்த மகன் பண்பாட்டோடு வளர்ந்த மகன் எப்படி இப்படி மாறினான் என்று எனக்கு தெரியவில்லை நான் என் தகப்பனுக்கு சோறு போட மறுத்திருந்தால் அவர் கஷ்டங்களுக்கு தோள்கொடுக்க தயங்கியிருந்தால் என் மகன் என்னிடம் இப்படி நடப்பதில் ஞாயம் இருக்கிறது நான் முறைதவறிய மகனாகவும் இல்லை பண்படாத தகப்பனாகவும் இல்லை பிறகு எப்படி எனக்கிந்த அவல நிலை வந்தது கடவுளுக்கு தான் அதன் காரணம் தெரியும்

என் மருமகள் அவன் மனதை மாற்றிவிட்டாள் அவன் பெண்டாட்டி தாசனாகி விட்டான் பணத்திற்கு அடிமையாகி பெற்றவர்களை கை கழுவி விட்டான் என்று எல்லோரும் பேசுகிறார்கள் நான் என் மருமகளை குறைசொல்ல மாட்டேன் அப்படியே அவள் தடுத்திருந்தாலும் கெட்ட மதியை இவனிடம் புகுத்திருந்தாலும் இவன் தான் அதை தடுத்திருக்க வேண்டும் பெற்றவர்களுக்கு உதவுவது தன கடமை என்று வலியுருத்திருக்க வேண்டும் அதை இவன் செய்ய வில்லை அதனால் இவன் தான் குற்றவாளி

அம்மா இல்லாமல் அப்பா மட்டும் தனியாக ஊரில் அவதி படுகிறாரே அவருக்கு சாதம் வடித்து கொடுக்க உடம்புக்கு சரியில்லை என்றால் மருந்து வாங்கி கொடுக்க யாரும் இல்லையே என்று அவன் நினைத்து கூட பார்க்க வில்லை நண்பர்களோடு மணிக்கணக்காக செல்போனில் பேச தெரிந்த அவனுக்கு என்னிடம் ஒரு வார்த்தை பேச கூட நேரமில்லை அவனை மகனாக பெற்றதற்கு நான் கஷ்டத்தை அனுபவிக்கலாம் அதற்காக வாங்கிய கடனை கொடுக்க முடியாமல் சாக நான் விரும்பவில்லை அதற்கு நீங்கள் எதாவது வழி கூறுங்கள் என்று தழுதழுத்த குரலில் என்னிடம் பேசினார்

அவருடைய கஷ்டத்திற்காக வருத்தப்படுவது மனிதாபிமானமாக இருக்கலாம் ஆனால் அந்த வருத்தம் மட்டுமே அவர் குறையை தீர்க்காது எனவே ஒரு முடிவுக்கு வந்த நான் அவரிடம் ஒரு மூலிகை உருண்டையை கொடுத்து இதை வீட்டில் வையுங்கள் நாலு மாதம் கழித்து என்னை வந்து பாருங்கள் என்று அனுப்பி வைத்தேன்

சரியாக ஐந்தாவது மாதத்தில் என்னை காண அவர் வந்தார் வந்தவர் முகத்தில் மகிழ்ச்சி தாண்டவமாடியது சுவாமி நீங்கள் கொடுத்ததை நம்பிக்கை இல்லாமல் தான் கொண்டு போனேன் ஆனால் அதிசயம் பாருங்கள் பதினைந்தே நாட்களில் என் மகன் என்னை காண வந்தான் என்னிடம் பாசமாக பேசினான் தாயாருக்காக பட்ட கடனையும் அடைத்து விட்டான் உடனே ஓடோடி வந்து உங்களை பார்த்திருப்பேன் ஆனால் விஷஜுரம் தாக்கியதால் என்னால் வரமுடியவில்லை அவன் திரும்பி திருந்தி நல்ல பையனாக வருவதற்கு நீங்கள் என்ன மாயம் செய்திர்கள் என்று என்னிடம் கேட்டார்

எல்லாம் கடவுள் சித்தப்படி நடந்தது அதில் என் பங்கு எதுவும் இல்லை மகனோடு சந்தோசமாக வாழுங்கள் என வாழ்த்தி அவரை அனுப்பி வைத்தேன் ஆனால் அவருக்கு தெரியாது நான் அவரிடம் கொடுத்தது மனித வசிய மூலிகை மருந்து என்று ஒரு மனிதனை வசியப்படுத்த மருந்துகளை பயன்படுத்துவது தவறு என்று எனக்கு தெரியும் இருந்தாலும் உடம்பில் புடைத்து கொண்டு கிளம்பும் கட்டியை அகற்ற வெட்டி எரிய கொலைக்கு பயன்படும் கத்தியை கூட பயன்படுத்தலாம் என்பது என் எண்ணம் இத்தகைய வசிய மூலிகைகளின் ரகசியங்களை இதற்காகத்தான் சித்தர்கள் கண்டறிந்தார்கள்.

# 9 - சிறுநீரை தங்கமாக்கும் ஜோதிமரம் !



மரங்களை விரும்பாத மனிதர்கள் இருப்பது மிகவும் அரிது. தினசரி விறகு வெட்டி பிழைப்பு நடத்துபவன் துவங்கி திருட்டுத்தனமாக மரங்களை விற்று வயிறு பெருத்தவனும் சரி, மரங்களின் அழகை ஒரு நிமிடமாவது ரசிக்காமல் இருந்திருக்க மாட்டான். மரங்களை கொலை செய்கின்ற இவர்களே ரசிக்கும் போது அதற்கு தண்ணீர் விட்டு வளர்க்கும் நீங்களும் நானும் ரசிக்காமல் எப்படி இருப்போம். எனக்கு சிறிய வயது முதற்கொண்டே தென்னை மரத்தின் மீதும், அரசமரத்தின் மீதும் மிகுந்த பற்றுதல் உண்டு. ஓங்கி உயர்ந்து நிற்கும் தென்னை மரம் அந்தி வானத்தில் ஓவியம் வரைய துடிக்கும் தூரிகை போல எனக்கு தோன்றும். பரந்து நிழலை தந்து அனைவருக்கும் இளைப்பாறுதலை தரும் அரசமரம் அன்னையை போல எனக்கு காட்சி தரும்.

மரங்களுக்கும் உயிர் இருக்கிறது என்று ஜெகதீஷ்சந்திரபோஸ் கண்டுபிடித்து உலகத்தாருக்கு விஞ்ஞானப்பூர்வமாக நிரூபித்தாராம். அவர் அப்படி நிரூபிப்பதற்கு முன்னால் உலகம் அதாவது உலகம் என்றால் அதில் நான் இந்த விஷயத்தை பொறுத்தவரை இந்தியாவை சேர்த்துக்கொள்ளவில்லை. வெள்ளைக்காரர்கள் வாழுகிற ஐரோப்பாவை தான் குறிப்பிடுகிறேன். இந்த உலகம் மரங்களுக்கு உயிர் இருப்பதாக நம்பவில்லை. மரங்கள் ஒரே இடத்தில் நிற்கும் ஜடம். அதற்கு உயிரும் இல்லை, உணர்வும் இல்லை என்று நினைத்தார்களாம். அவர்கள் மண்டையில் ஓங்கி அடிப்பது போல நமது கல்கத்தா விஞ்ஞானி பார்முலாக்களை விவரித்துக்காட்டி முட்டாள்தனமான வெள்ளைக்கார உலகத்தை நம்பவைத்திருக்கிறார். ஆனால் நமது ஆசியாவில் குறிப்பாக இந்தியாவில் மரங்களை உயிரற்ற பொருளாக யாருமே நினைத்தது இல்லை.

ஒரு பழம், தமிழ் இலக்கியம் காதலி ஒருத்தி தனது காதலனை கட்டிப் பிடிப்பதற்கு தயங்கி எட்டி நின்றாளாம். காதலன் தயக்கம் ஏன் என்று கேட்டபோது இங்கே இருக்கின்ற மரம் எனக்கு அக்கா முறை வேண்டும் அக்காவின் முன்னால் ஆடவன் ஒருவனை எப்படி கட்டி அணைப்பது என்று சொன்னாளாம். அதாவது மரத்தை தனது சகோதரியாக கருதும் அளவிற்கு நமது நாட்டு பண்பாடு வளர்ந்திருந்தது. மரங்களை நாம் உண்மையாக நேசித்ததனால் தான் மரத்தில் தெய்வம் இருப்பதாகவும், மரமே தெய்வமாக இருப்பதாகவும் போற்றி வழிபட்டோம். அப்படிப்பட்ட மரங்கள் இன்று எண்ணிக்கையில் குறைந்து கொண்டே போகிறது என்பது உண்மைதான் என்றாலும், மரங்களை நேசிக்கும் இயல்பு வளர்ந்து கொண்டே போகிறது என்பதும் உண்மையாகும்.

மரங்களில் தான் எத்தனை வகை கனிகளை கிளைகளில் தந்தால் சுவை சற்று குறையும். அதே கனிகளை வேர்களில் பழுத்து மண்ணுக்குள் புதைத்து கொடுத்தால் எவ்வளவு சுவை கூடும் என்று நமக்கு காட்டும் வேர்பலா தான் பழுத்து உதிர்த்த கனிகளையே தானே மீண்டும் எடுத்து கிளைகளில் ஒட்டிக் கொள்ளும், ஏரழிஞ்சல் மனிதர்கள் அருகில் வந்துவிட்டால் திருடன் வருகிறான் ஜாக்கிரதை என்று எச்சரிப்பது போல மனித வாசனை பட்டாலே எருமை போல சத்தம் எழுப்பும். கன எருமை விருட்சம், இப்படி வகை வகையாக சொல்லலாம். இந்த வரிசையில் மிகவும் விந்தையான மரத்தை பற்றி சித்தர்கள் சொல்கிறார்கள் அதன் பெயர் ஜோதி மரம்.

நான் மிகவும் சிறுவனாக இருந்தபோது ஒரு தாத்தா எனது நண்பராக இருந்தார். அவர் வேடிக்கையாக பேசுவார், வினோதமான செயல்களை செய்வார். அவர் சொல்வதும் செய்வதும் கற்பனை போல் இருந்தாலும் அனைத்தும் உண்மையாக இருக்கும். அவர் ஒருமுறை என் நண்பன் ஒருவனை பார்த்து நீ மூத்திரம் அடித்தால் இரும்பை பொன்னாக்கும் ஜாதியா? பேசாமல் கிட என்றார். எனக்கு மூத்திரம் அடித்தால் இரும்பு பொன்னாகுமா? அது எப்படி முடியும்? அப்படிப்பட்ட மனிதர்கள் யாராவது இருக்கிறார்களா? என்று அறிந்து கொள்ள ஆசை அப்போதே வந்துவிட்டது. அதனால் அந்த தாத்தாவிடமே கேட்டேன் நீங்கள் கூறுவது போல யாராவது இருக்கிறார்களா? என்று அவர் சிரித்து கொண்டே சொன்னார். இப்போது இருக்கிறார்களோ இல்லையோ ஆனால் ஒரு காலத்தில் இருந்திருக்கிறார்கள் அதைப்பற்றி போகர் என்ற சித்தர் எழுதி வைத்திருக்கிறார் என்று கூறினார்.

அவர் கூறியது அப்படியே என் மனதில் பதிந்துவிட்டது. போகர் எழுதிய நூல்களை கண்டிப்பாக படிக்க வேண்டும் என்று நான் ஆசைப்பட துவங்கினேன். அந்த ஆசை எனது முப்பதாவது வயதில்தான் நிறைவேறியது. போக முனிவரின் மலைவாகடம் என்ற பழமையான நூலை படிக்கும் வாய்ப்பு கிடைத்தது. அதில் பழையகாலத்து தாத்தா சொன்ன ஜோதி மரத்தை பற்றிய குறிப்புகள் இருந்தது. இந்த மரத்தின் பட்டையை எடுத்து வந்து குழித்தைலம் எடுத்து அருந்த வேண்டுமாம். அப்படி அருந்தியவுடன் மயக்கம் வருமாம். மயங்கி விழுந்தவரை வாழைப்பழமும், நெய்யும் கலந்து பிசைந்து ஊட்டி விட்டு நீட்டி படுக்க வைத்துவிட வேண்டுமாம். கால் கட்டை விரல்

இரண்டையும் சேர்த்து வைத்து இறந்தவர்களுக்கு கட்டுவது போல் கட்ட வேண்டுமாம்.

அவர்கள் ஏழு நாட்கள் மயக்கத்தில் இருப்பார்களாம். பின் மயக்கம் தெளிந்து எழுந்தவுடன், சுத்தமான பசும்பாலில் பனைவெல்லம் கலந்து கொடுக்க வேண்டுமாம். அதன் பிறகு பாசிப்பயிறு சாம்பாரும், பச்சரிசி சாதமும் சாப்பிட வேண்டுமாம். அதன்பிறகு சகஜ நிலைக்கு வந்துவிடும் அந்த மனிதன் தனது இயற்கை உபாதையை எதில் கழித்தாலும், அவைகளில் எது பட்டாலும் தங்கமாக மாறிவிடுமாம் இப்படி போகர் கூறுகிறார். போகர் மட்டுமல்ல சுந்தரானந்தர் குறுநூல் என்ற புத்தகமும் இதையே சொல்கிறது. இந்த ஜோதி மரம் அடி பெருத்தும், இலைகள் வட்டமாகவும் மலர்கள் ஊமத்தம் பூ வடிவிலும் இருக்குமாம். மரத்தை கொத்தினால் கள்ளிச்செடியில் வடிவது போல் பால் வடியுமாம். சந்திரன் வராத அமாவாசை பொழுதில் மின்மினி பூச்சிகள் ஒட்டி உள்ளது போல வெளிச்சமாக தெரியுமாம். இத்தகைய மரம் கொல்லிமலை, சதுரகிரிமலை,பொதிகைமலை போன்ற இடங்களில் முன்பு இருந்ததாம். இப்போது யாரும் அதை பார்த்ததாக தகவல் இல்லை.

ஆனால் நான் இருட்டிலும் வெளிச்சமாக தெரியும் ஜோதி புல்லை பார்த்திருக்கிறே.ன் இது மஞ்சள் நிறத்தில் இருக்கும். நான்கு விரல் உயரம் வரையிலும் இது வளரக்கூடியது. இரவிலே இதைப்பார்த்தால் தீப்பற்றி எரிவது போல இருக்கும். இந்த புல்லை செந்தூரம் செய்து நெல்மணி அளவு ஒரு மண்டலம் சாப்பிட்டு வந்தால் தியானம், யோகம் இவைகள் கைகூடும் என்று பெரியவர்கள் சொன்னதனால் மிகவும் சிரமப்பட்டு அதை கண்டடைந்தேன். இப்போது ஜோதிப்புல் எங்கே கிடைக்குமென்று தெரியவில்லை. ஆனாலும் அதை நான் பார்த்திருக்கிறேன் பலனை அடைந்திருக்கிறேன் எனும் போது நமது சித்தர்கள் ஒருநாளும் இல்லாததை பேசவில்லை இருப்பதை தான் பேசினார்கள். நாம் தான் இருப்பதை இல்லாது செய்துவிட்டு வறியவர்களாக நிற்கிறோம்.

இன்று நம்மிடையே வாழுகின்ற பல மரங்களில் இப்படி எத்தனையோ சக்திகள் மறைந்து கிடக்கலாம். அவைகள் நமக்கு தெரியவில்லை என்பதனால் மரங்களை அழித்து அதன் சக்திகளை கெடுத்துவிடக்கூடாது. அதனால் மரங்களை நேசிக்கும் பண்பை நமது சுயநலத்தை முன்னிறுத்தியாவது வளர்த்துக்கொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன்.

## 10 - தங்கம் செய்யுமா சிவப்பு கற்றாழை ?



சித்தர்கள் ரகசியம் என்ற தொடரை ஆரம்பித்தவுடன் சித்தர்களின் மேல் ஆர்வம் கொண்ட பலரும் என்னோடு தொடர்பு கொண்டார்கள். சித்தர்கள் கடைபிடித்த ரகசிய வழிமுறைகளை நீங்கள் ஒருபுறம் சொன்னாலும், இன்னொருபுறத்தில் அவர்கள் கையாண்ட, அவர்கள் பயன்படுத்திய, அவர்களால் உலக மக்களுக்கு அறிமுகப்படுத்தபட்ட பல மூலிகைகளை அதன் ரகசிய அர்த்தங்களோடு தனி பதிவுகளாக எழுதலாமே என்று ஆலோசனை கூறினார்கள். மூலிகைகளை பற்றிய உண்மையான விழிப்புணர்வு மங்கி கொண்டு வருகின்ற இந்த நேரத்தில் அப்படி ஒரு தொடர் பதிவு அவசியம் என்று நானும் நினைத்தேன். அதனால் சிறியதாகவும், அதே நேரத்தில் வீரியம் உள்ளதாகவும் சில மூலிகை தகவல்களை உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன்.

சில வருடங்களுக்கு முன்பு ராமேஸ்வரத்தில் இருந்து வந்த அன்பர், சிவப்பு கற்றாழையை பற்றி என்னிடம் கூறினார். அதற்கு முன்பே அதைப்பற்றி சிறு விபரங்களை நான் அறிந்து வைத்திருந்தாலும் அவர் சொன்ன தகவல் ஒன்று எனக்கு வியப்பாக இருந்தது. சிவப்பு கற்றாழையை முறைப்படி கற்பம் செய்து ஆறுமாத காலம் தொடர்ந்து உண்டு வந்தால் அதை உண்டவன் எதாவது ஒரு பொருளில் எச்சில் துப்பினால் கூட அது தங்கமாகி விடும் என்றார். என்னால் அதை நம்ப முடியவில்லை. ஒரு மனிதன் எச்சில் துப்பி அது தங்கமாக மாறுகிறது என்றால் நிமிட நேரத்தில் நடக்க கூடிய மாயஜால வித்தையாக இருக்குமே தவிர உண்மையாக இருக்காது.

நாம் அடிக்கடி கண்களால் பார்க்க முடியாத மூலிகைகளின் பெயர்களை சொல்லி அவற்றின் அதிதீவிரமான பயன்களை கற்பனை கலந்து சொல்வது சிலரின் வாடிக்கை. இதை நான் பல நாட்டு வைத்தியர்களிடம் பார்த்திருக்கிறேன். அவர்கள் வார்த்தைகளில் கொட்டுகிற ஜாலத்தை, மருந்தின் செயல்பாட்டில் காணமுடியாமல் பல நேரம் ஏமாந்தும் இருக்கிறேன். அப்படித்தான் இதுவும் ஒரு கட்டுக்கதையாக இருக்கும் என்று நம்பினேன். ஆனால் சித்தர்களோடு நேரடி தொடர்பு வைத்திருந்த சிலர் சிவப்பு கற்றாழை கல்லைக்கூட தங்கமாக்கும் என்று கூறினார்கள் அவர்களிடம் நான்

அதை நேரடியாக காட்ட முடியுமா? என்று கேட்டேன். பல காரணங்களை சொல்லி அவர்கள் மறுத்து விட்டார்கள் ஆனால் மழுப்பி நழுவி விட்டார்கள் என்று என்னால் கூற முடியாது.

இந்த நிலையில் தான் மூலிகையோடு நல்ல தொடர்புடைய ஒரு மனிதரை சந்தித்தேன். அவர் சிவப்பு கற்றாழையின் பயன்பாடுகளை மிக அழகாக சொன்னார் சிவப்பு கற்றாழையை பயன்படுத்தினால் தங்கமாக எல்லாம் ஆகி விடும் என்பது சுத்தப்பொய் அது அரிதான பொருளாக அவ்வளவு சீக்கிரம் கிடைக்க முடியாத பொருளாக இருப்பதனால் அந்த மாதிரியான கதை கட்டிவிடப்பட்டிருக்கிறது. உண்மையில் சிவப்பு கற்றாழையை முறைப்படி கற்பம் செய்து சாப்பிட்டால் முதுமையான தோற்றம் படிப்படியாக மறையும். வெளுவெளுப்பான முடிகள் கூட கருப்பாக உடலில் நல்ல பலமும் ஆண்மை விருத்தியும் ஏற்படும். உடம்பு தங்கம் போல ஜொலிக்கும் என்று கூறினார்.

சிவப்பு கற்றாழையின் மடல்கள் பசுமை கலந்த செம்மை நிறத்தில் சுமார் பதினெட்டு அங்குலம் நீளத்தில் நல்ல சதைப்பற்றோடு இருக்கும். மடல்களில் மிகச்சிறிய வெள்ளை புள்ளிகள் தென்படும். ஓரங்களில் சிவப்பு நிற முட்கள் இருக்கும். கத்தியால் வெட்டினாலோ, ஒடித்தாலோ அதன் சதைப்பகுதி இரத்தம் போல் சிவந்து அதிலிருந்து அசல் இரத்தம் போன்ற திரவம் வடியும். அதன் சோற்றுப்பகுதி சாதாரண கற்றாழை சோற்றை போல கசப்பாக இருக்காது. நாற்றம் இல்லாமல் வெள்ளரிக்காய் போல இருக்கும். அதிகப்படியான செம்மண் எங்கே இருக்கிறதோ அங்கே தான் இந்த கற்றாழை வளரும். இதில் செம்பு சத்தும், தங்க சத்தும் அதிகம் என்று கூடுதலான தகவல்களையும் அவர் கூறினார். எனக்கு அப்போது தான் நினைப்பு வந்தது. களக்காடு மலைப்பகுதிகளில் இத்தகைய கற்றாழை ஒரு காலத்தில் நிறைய இருந்தது இப்போது அது அறுகிவிட்டது என்பது.

இன்றும் சில நம்பிக்கை மிகுந்த மூலிகை தேடுபவர்களிடம் கூறினால் திருநெல்வேலி, கன்னியாகுமரி, திருவனந்தபுரம் போன்ற பகுதிகளிலிருந்து சிவப்பு கற்றாழை கொண்டு தருகிறார்கள். ஆனால் அது மிகவும் குறைவான அளவில் மட்டுமே கிடைக்கிறது. சிறு துண்டு கூட நிறைய விலை கூறுகிறார்கள் அதை வாங்கி நாம் பயன்படுத்துவது நடக்க கூடியதாக இருக்குமோ இல்லையோ கற்றாழை என்பது பச்சை நிறத்தில் மட்டும் இல்லை சிவப்பு நிறத்திலும் இருக்கிறது என்ற தகவலை மட்டுமாவது தெரிந்து கொள்ளலாம்.

# 11 - சித்தர் பரிசால் நீங்கிய நோய்



சித்தர்களிடமிருந்து எனக்கு ஏற்பட்ட அனுபவங்களையும்

அவர்கள் எனக்குத்தந்த நவபாஷாணம் என்ற பரிசைப்பற்றியும்

நான் எழுதியிருக்கும் பதிவுகளை படித்து விட்டு தொலைபேசியில் பேசிய பலர்

அதைக் கொண்டு நீங்கள் யாருக்காகவாவது நன்மை செய்திருந்தால் அதை எழுதலாமே என்று சொன்னார்கள்

அதனால் நவபாஷாணம் மூலம் எனக்கேற்பட்ட முதல் அனுபவத்தை உங்களோடு பகிர்ந்துக் கொள்கிறேன்

நிறைய பேர் நவபாஷனம் என்பது நேரிடையாக நோயை குணப்படுத்தும் மருந்து என நினைத்துக் கொண்டுயிருக்கிறார்கள்.

அது முற்றிலும் தவறுதலான எண்ணமாகும்.

பொதுவாக நோய் என்பது உடலில் உள்ள உயிர்காக்கும் சத்துக்கள் குறைவதினால் தான் வருகிறது.

இந்த விதி எய்டஸ் நோய் முதல் ஜலதோஷம் வரை பொருந்தும்.

நவபாஷானம் என்பது உடம்பில் இழந்து விட்ட சத்துக்களை நோய் எதிர்ப்பு சக்திகளை மீண்டும் கட்டி தருவதாகும்.

அதனால் தான் இந்த மருந்து எல்லா நோய்களுக்கும் பரம ஔஷதமாக இருக்கிறது.

புற்று நோயின் கொடுமை தன்மையை நாம் எல்லோருமே அறிவோம்.

பழங்கால சித்தர் பாடல் ஒன்று புற்று நோய் வந்து மாண்டவர்கள் மீண்டும் பிறப்பதில்லை என்று சொல்கிறது.

அதாவது பூர்வ ஜென்ம கர்மாவினால் வந்த பாவத்தையும், தற்போதைய பிறப்பில் செய்த பாவ விளைவுகளையும் ஒரே நேரத்தில் அனுபவிப்பது போன்ற கொடுமை தான் புற்றுநோயின் வேதனை என்பது முன்னோர் வாக்கு.

பன்நெடுங்காலமாகவே மனித சமுதாயம் புற்றுநோயோடு மோதி தோற்று போய் நிற்கிறது.

இதற்கு காரணம் புற்று நோயிலிருந்து விடுபட மருந்து இல்லாமல் இல்லை.

ஆனால் இது தான் புற்று நோய் என்று வைத்தியன் கண்டுபிடிப்பதற்கு முன்பே அந்த நோய் எல்லை மீறி மனித உயிர்களை காவுக் கொண்டுவிடுகிறது.

சென்னையிலிருந்து ஒரு இளம் பெண்ணை அவள் பெற்றோர்கள் அழைத்து வந்து இருந்தனர்.

செடியிலிருந்து அப்போது தான் பறித்த புத்தம் புது மலர் போல அந்த பெண் மலர்ச்சியுடன் இருந்தாள்.

அவளுக்கு ரத்த புற்றுநோய் என்பதை கற்பூரம் அனைத்து சத்தியம் செய்தாலும் நம்புவது கடினம்.

ஆனால் கடவுள் எதற்காகவோ அந்த சின்ன பெண்ணை பெரியதாக அவஸ்தை படுத்திக் கொண்டிருந்தார்.

பல நேரங்களில் நாம் அனுபவிக்கும் கஷ்டங்களுக்கு காரணம் என்னவென்றே தெரியாது.

துருவி துருவி ஆராய்ந்தாலும் அது நமக்கு புரிவதில்லை.

நேற்று நாம் பாவம் செய்தோம் என்றால் இன்று அதற்கான தண்டனை அனுபவிப்பது என்பது இதற்காகத் தான் என்று தெரியும்.

சென்ற பிறவியில் செய்த பாவம் இன்னதென்று யாருக்கு தெரியும்?

அதனால் ஏற்படும் வேதனைகளை இந்த நோய்கள் என்று மனதை சமாதானப்படுத்திக் கொள்ள வேண்டியது தான்.

வேறு எந்த மார்க்கமும் கிடையாது.

நிச்சயமாக அந்த பெண் இந்த பிறவியில் பாவம் செய்திருக்க மாட்டாள்.

அதற்கான வயது அவளுக்கு இன்னும் வரவில்லை.

ஒன்று பெற்றவர்களின் பாவத்திற்காக அவள் வேதனைப்பட வேண்டும்

அல்லது பூர்வ ஜென்மத்திலிருந்து சுமந்து வந்த பாவ மூட்டைகளை இப்படி செலவிட வேண்டும்.

எது எப்படியோ? அந்த பெண் பார்த்தவுடன் அவளுக்கு இருக்கும் நோயை அறிந்தவுடன் கல்நெஞ்சன் கூட கண்ணீர் வடிப்பான்.

எனக்கு கிடைத்த நவபாஷானத்தை முதல் முறையாக அந்த பெண்ணிற்கு நம்பிக்கை இல்லாமல் தான் கொடுத்தேன்.

அவளிடமோ அவள் பெற்றோரிடமோ எந்த உறுதி மொழியும் நான் கொடுக்கவில்லை.

காரணம் அதைப்பற்றி எனக்கு எந்த முன் அனுபவமும் இல்லை என்பதினால் தான்.

ஆனால் மூன்று மாதத்தில் அவர்களிடமிருந்து மிக மகிழ்ச்சியான செய்தி வந்தது.

அந்த பெண்ணின் நோயின் வேகம் பாதி அளவு குறைந்து இருப்பதாக தங்களுக்கு புது நம்பிக்கை ஏற்பட்டு இருப்பதாகவும் தகவல் சொன்னார்கள்.

அவர்களுக்கும் மகிழ்ச்சி தான். எனக்கோ அதை விட பன்மடங்கு மகிழ்ச்சி.

நம்மிடம் இருக்கும் ஒரு பொருளால் ஒரு சிறிய பெண்ணின் கொடிய வியாதியை மட்டு படுத்தும் பாக்கியத்தை எல்லாம் வல்ல ஸ்ரீமத் நாராயணன் எனக்கு கொடுத்து இருக்கிறானே என்று.

**Sri Guruji Ashramam**

**Cell No:- 9442426434**

**Web Site:- www.srigurujiashramam.com**

**E-Mail Id:- srigurujiashramam@gmail.com**